# ஜாமக்காரன்

WATCHMAN


காவல்காரன்

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com





**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**இயேசுகிறிஸ்துவின் பெயரில் உங்களை வாழ்த்துகிறேன். நம் இந்திய தேசத்தின் 69வது சுதந்திர தினமாக இம்மாதம் ஆகஸ்ட் 15ம் தேதி அனுஷ்டிக்கப்படுகிறது. நம் இந்திய சரித்திரத்தில் பாகிஸ்தான் இணைந்த இந்தியாவை மொகலாயர்கள் ஆண்டார்கள். அரசாங்க உதவிகள் பெற பல இந்துமத மக்கள் இஸ்டலாமிய மதத்தில் சேர்ந்தார்கள். பல இந்துமத மக்களை கட்டயாப்படுத்தி இஸ்லாமிய மதத்தில் சேர்த்தார்கள்.**

**‘ அதன்பின் கம்பெனி ஆட்சி அதாவது கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் வெள்ளைக்கார வியாபாரிகள் மொகலாய சாம்ராஜ்யத்தை வீழ்த்தி பெரும்பாலான இந்திய மாநிலங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கிழக்கிந்தியகம்பெனிகள் கொண்டுவந்தன. இவர்கள் வெள்ளையர்களானாலும் மிஷனரி ஊழியங்களுக்கு எதிரானவர்கள். மிஷனரிகளை சுவிசேஷம் அறிவிக்க தடை செய்தவர்கள். இந்தியர்களுக்கு கல்வி,நாகரீகம் மிஷனரிகளால் கிடைக்கும். அப்படி கிடைத்தா் நாட்டு மக்கள் விழப்புணர்வு அடைந்து தங்களை வியாபாரம் பாதிக்கும் என்ற அச்சத்தில் மிஷனரிகளை தடுத்தனர். அதன்பின் பிரிட்டீஷ் ஆட்சியாளர் இந்தியாவின் முழுநாட்டின் ஆட்சியையும் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். இவர்கள் காலத்தில் ஒரளவு மிஷனரிகள் ஊழியம் செய்யமுடிந்தது.**

**‘ இந்திய நாட்டில் நல்ல முன்னேற்ற பாதையில் பிரிட்டீஷ் அரசாங்கம் கொண்டு போனது. இந்தியாவில் பஞ்சகாலம் உண்டான சமயம் பர்மாவிலிருந்து அரிசியும் வெளிநாட்டிலிருந்து கோதுமையும் வாங்கி மக்கள் பட்டினியடையாமல் பார்த்துக்கொண்டனர் என்று என் பெற்றோர் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒருபக்கம் நம் இந்தியாவின் லவங்கம், ஏலக்காய், மிளகு,தங்கம் ஆகியவைகளை சுரண்டி எடுத்துக்கொண்டு போனார்கள். ஆனால் அதே சமயம் இந்திய மக்களின் முன்னேற்றத்துக்கு இரயில் முதல் பஸ்கள்,மற்ற வாகனங்கள்,மின்சாரம் ஆகியவைகளை இந்தியாவுக்குள் அறிமுகப்படுத்தி இந்திய மக்களை பயனடைய செய்தனர்.**

**அதே சமயம் இந்தியாவில் மகாத்மா காந்தி,காமராஜர்,ஜவஹர்லால் நேரு**

ஆகஸ்ட் 2015

போன்றவர்களின் தியாகத்தால் சாத்வீக போரட்டத்தால் கத்தி எடுக்காமல் இரத்தம் சிந்தாமல் நம் இந்திய சுதந்திர தியாகிகளின் அற்புத தியாக செயல்களால் பலரின் உயிர் தியாகத்தால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஒரே நாளில் நமக்கும், இலங்கைக்கும் சுதந்திரம் அளித்து நம்மை நாமே ஆளும் அற்புத ஏற்பாட்டையும் செய்து கொடுத்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறினார்.

ஆனால் அதன்பின் நாம் உண்மையான சுதந்திரம், சந்தோஷம் அனுபவித்தோமா? தியாகங்கள் மறைந்து ஊழல்கள் பெருகின. கட்சிகளின் எண்ணிக்கை பெருகின. நம் வரி பணத்தை நம் தெரிந்தெடுத்து ஆட்சியில் அமர்த்திய நம் ஆட்களே கொள்ளையடித்தனர். தனக்கென்றும் தன் குடும்பத்துக்கென்றும் பண சேமிப்பு இல்லாத திரு.கக்கன், பெருந்தலைவர் காமராஜர், திரு.லால் பகதூர் சாஸ்திரி, கேரளாவில் திரு.நம்பூதிரிபாட் போன்றவர்களை இனி காணமுடியுமா? மத்திய அரசால் ஒவ்வொரு எம்பிமார்களும் அவரவர் தொகுதி அல்லது மாநில முன்னேற்றத்துக்கென்று ஒதுக்கப்பட்ட பல கோடி பணம் செலவு செய்யப்படாமலே திரும்ப டெல்லி கஜானாவுக்கு திரும்ப சென்றடைந்தது. காரணம் அந்த பணத்தில் களவாட முடியாதபடி பணத்தை நேரடியாக எடுக்க முடியாதபடி சில கட்டுபாடுகள் இருந்தது. அதை இந்த எம்பிக்கள் மீற முடியவில்லை. தனக்கு சொந்த உபயோகத்துக்கு உதவாத பணம் என் மாநிலத்துக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம் என்று அதை செலவு செய்ய முடியாமல் திரும்ப பெறப்பட்டதாக செய்தி குறிப்புகள் கூறுகின்றன.

இப்படி நாட்டைப்பற்றி கவலைப்படாத நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளைப்பற்றி கவலைப்படாத அரசியல்வாதிகள்தான் அனைத்து கட்சிகளிலும் பெருகியுள்ளார்கள்.

ஒருமுறை சென்னையில் பல இடங்களில் மக்கள் பாட்டில்களில் தண்ணீர் நிரப்பி கையில் எடுத்துக்கொண்டு பெண்களும், ஆண்களும் போராட்டத்தில் இறங்கி ஊர்வலம் வந்து கொண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து இந்தியாவை தமிழ்நாட்டை சுற்றி பார்க்க வந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் போராட்டத்தின் காரணத்தை கேட்டு அறிந்தபின் மக்கள் கையில் பிடித்திருந்த பாட்டில் தண்ணீரை புகைப்படம் எடுத்து அவர்கள் கூறியதாவது: குடிநீரில் -சாக்கடை தண்ணீர் கலக்கிறதை பல மாதங்களாக புகார் அளித்தும் தொகுதி எம்எல்ஏ, தொகுதி கவுன்சிலர், மேயர், கலெக்டர், முதல்வர், மந்திரிகள் நடவடிக்கை எடுக்காதது ஏன்? அந்த பகுதி சுகாதார அதிகாரிகள் ஒவ்வொரு வாரமும் அந்த பகுதி தண்ணீரை அவர்களாகவே பரிசோதித்து தண்ணீரில் இருக்கவேண்டிய மினரல்களின் அளவு குறைந்தால் கூட உடனே அவசர நடவடிக்கை எடுக்கவேண்டுமே! இல்லையானால் மக்களின் ஆரோக்கியத்துக்கு கேடு உண்டாகுமே! அப்படியிருக்க குடிநீரில் -சாக்கடை தண்ணீர் கலந்திருப்பதை கண்கூடாக பார்த்தும், அறிந்தும் புகார் செய்தும், நடவடிக்கைல்லாமல் இந்த சுத்த தண்ணீருக்கு போராட்டம் நடத்தினால் தான் சரிப்படுத்துவார்களா? என்று ஆச்சரியத்தோடு கேட்டது நமக்கு எத்தனை பெரிய அவமானம்.

சுதந்திரம் அடைந்து நம் நாடு இப்படி செயல்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும். நாட்டுக்காக ஆள்பவருக்காக அதிகாரிகளுக்காக தினசரி ஜெபிக்க வேண்டியது அவசியமல்லவா?

நம் நாட்டுக்காக ஜெபிக்க முழு இரவு ஜெபம் என்றைக்கு கூடுவார்கள், உபவாச ஜெப கூடுகை எப்போது நடக்கும் என்றெல்லாம் காத்துக்கொண்டு இருக்காமல் நம் ஒவ்வொருவருடைய தனி ஜெபத்தில் தினசரி ஜெபத்தில் ஜெபிக்க வேண்டியது மிக அவசியமல்லவா!

**1தீமோ 2:1-4ல் பவுல் நாட்டு தலைவர்களுக்காக ஜெபிக்க வேண்டிய அவசியத்தை தெளிவாக கூறினாரே! அதை பிரதானமாக சொல்லும் புத்திமதி என்றார். அதன் பலன் என்ன? நாம் யாவரும் பக்தியோடு வாழ தடையிருக்காது. நல்ல ஒழுக்கம் தேசத்தில் வாலிப பிள்ளைகளிடையில் உண்டாகும் என்கிறார். அதோடு நாம் நம் நாட்டில் கலகம் இல்லாமல் அமைதலாய் சமாதானத்துடன் வாழ முடியும் என்கிறார்.**

**அப்படி நம் நாடு சமாதானமாய் இருந்தால்தான் உங்களுக்கும் எனக்கும் நம் யாவருக்கும் சமாதானம் உண்டாகும். எரே 29:7.**

**இந்த மாதம் இந்திய சுதந்திரதினத்தில் நம் இந்தியாவை சுதந்திர நாடாக,குடியரசு நாடாக மாற்ற உழைத்த போராடிய தியாகம் செய்த எல்லா மாநிலத்தில் உள்ள சுதந்திர தியாகிகளுக்காக தேவனை துதிப்போம்.**

**என் நாடு இந்தியா- நான் இந்தியன் கர்த்தர் என் தேசத்தை ஆசீர்வதிப்பாராக.ஜெய்ஹிந்த்!**

' **ஆன்-லைனில் காணிக்கை அனுப்பகிறவர்கள் தயவுசெய்து உங்கள் விலாசம், தொலைபேசி எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள்.**

' **மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும்,நன்றியையும் அறிவிக்கிறேன். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.**

ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம்.

**(தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஒய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

' வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையில்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## திரு. அப்துல் கலாம்

**கேள்வி:** முன்னாள் குடியரசு தலைவர் **திரு.அப்துல் கலாம்** அவர்களுக்கு நம் CSI சபைகளில் ஆராதனையில் ஏன் அஞ்சலி செலுத்தவில்லை? எல்லா மதங்களில் உள்ளவர்களும் அந்த நல்ல மனிதருக்கு அஞ்சலி செலுத்தினார்களே?

**பதில்:** *குடியரசு **தலைவர்** பதவியில் இருந்து மரித்துபோனாலும், பதவியில் இல்லாமல் இறந்து போனாலும் **கிறிஸ்தவ சபை ஆராதனையில் மரித்தவர்கள் யாருக்கும் அஞ்சலி** செலுத்துவதில்லை. ஆனால் மரித்த திரு.கலாம் அவர்களை நினைக்க பொது இடத்தில் சபை மக்கள் ஒன்றுகூடி அவருடைய நல்ல செயல்களை நினைவுகூர்ந்து சபை மக்களிடையே பகிர்ந்துக் கொள்ளவதில் தவறேதும் இல்லை. அப்போதும் **மரித்த ஆத்துமாவுக்காக** சாந்திடைய ஜெபிப்பது கூடாது. வசன அடிப்படையில் அது சரியல்ல.*

*மறைந்த திரு. அப்துல் கலாம் அவர்கள் தன் மத நம்பிக்கையில் வைராக்கியம் உள்ளவராக இருந்தார். சிறுவயதில் பள்ளிப்பருவத்தில் தன் நண்பனுடன் இந்து ஆலயத்துக்கு சென்று இருக்கிறார். ஆனால் அவர் வளர்ந்து படிக்கும்போதும், விஞ்ஞானியான பிறகும், ஜனாதிபதியான பிறகும் முஸ்லீம் அல்லாத பிற மத ஆலயங்களுக்கும் மத சம்பந்தமான விழாக்களுக்கும் சென்றார்.. ஆனால் எந்த ஒரு விக்கிரகத்தையும் கைகூப்பி அவர் வணங்கியதில்லை. ஒரு சமூக நல்லிணக்க கூட்டம் ஒன்றில் அதை விளக்கேற்றி தொடங்கி வைக்கும்போது அவர் கூறியாதவது: **குத்துவிளக்கு இந்து** மதத்தினருக்குறியது, அதை ஒரு எரிய வைக்க **மெழுகுவர்த்தி** கொண்டு கொளுத்தினேன். மெழுகுவர்த்தி **கிறிஸ்தவர்கள்** கூடுதலாக உபயோகிப்பதாகும், இதை கொளுத்துகிற நான் ஒரு **இஸ்லாமியன்.** இந்து,கிறிஸ்தவ,இஸ்லமிய நல்லிணத்துக்கு இந்த செயல் நல்ல உதாரணம் என்றார். மிக ஞானமாக தன் உரையில் அதை பகிர்ந்துக்கொண்டார். அந்த மத நல்லிணக்க கூட்டத்தில் அவர் நெற்றியில் சந்தனபொட்டு இட்டு வரவேற்றார்கள். வெளிநாட்டு கிரிகெட் வீரர்கள் விமான நிலையத்தில் வந்திறங்கும்போது எல்லாரையும் இந்திய கலாச்சார அடையாளமாக சந்தன பொட்டிட்டு மாலை அணிவித்து வரவேற்பதைப்போல்இந்து மக்களின் பணக்கார கோவில் என்று கூறப்படுகிற ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதிக்கு கலாம் அவர்கள் அழைக்கப்பட்டு சென்றார். அங்குள்ள விக்கிரகத்தை வழிபட அவர் செல்லவில்லை. அந்த ஆலய சட்டப்படி இந்து அல்லாதவர் ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. அரசியல் பிரபலங்கள் வந்தால் அவர்கள் மாற்று மதத்தினவராக இருந்தால் அவர்களிடத்தில் ஒரு விண்ணப்ப பாரத்தில் கையெழுத்து வாங்குவார்கள். அதுவும் அவர்கள் வேற்று மதத்தினர் என்று வெளிப்படையாக அறிந்தால் மட்டுமே அப்படி கையெழுத்து வாங்கப்படும். ஆலயத்தில் உள்ள தெய்வ விக்கிரகத்துக்கு மரியாதை செலுத்துவேன் என்று ஒப்புதல் வாக்குமூலமாக எழுதி கையெழுத்திட்டபின்,உள்ளே அழைத்து சகலமரியாதைகளுடனும் அவர்களை வரவேற்பார்கள்.*

அப்படிதான் திரு.அப்துல் கலாம் வரவேற்கப்பட்டார்.

' **திருப்பதி** போனால் காணிக்கை **ரசீது வாங்க வேண்டும்.** அது காணிக்கை அளிப்பவர் பெயரில் விக்கிரகத்துக்கு முன்னால் தூபம்காட்டி அர்ச்சனை செய்யப்படும். அப்போது கலாம் அவர்கள் மின ஞானமாக என் பெயரை ரசீதில் எழுதவேண்டாம் **இந்தியா** என்று எழுதிக் கொள்ளுங்கள் என்றார். அப்படி **இந்தியா** பெயருக்கு அர்ச்சனையும் செய்யப்பட்டது.

எல்லா மதங்களைப்பற்றியும் மத கோட்பாடுகளைப்பற்றியும் அறிய அவர் பல புத்தகங்களை படித்துள்ளார். இந்திய விஞ்ஞானிகள் உட்பட 118 உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து **கடவுள் துகள்** என்ற விஷயத்தை ஆராய்ச்சி செய்வதைப்பற்றி பேச கூறினார்கள். இந்த ஆராய்ச்சியை மேற்க்கொள்ளகூடாது என்று பெரும்பாலான நாடுகள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். இந்த ஆய்வுக்கு பூமியை மிக ஆழமாக தோண்டவேண்டும். அதனால் பின் விளைவுகள் பூமிக்கு ஏற்படும். ஆனால் பூமியை தோண்டுவதை திரு.கலாம் அவர்கள் மட்டும் எதிர்க்கவில்லை. பூமியை தோண்டுவதில் தவறில்லை என்று அவர் கூறி இந்தியாவின் தமிழ் புராணங்களில் ஒன்றான **அகத்திய நூலில் அணுவும் நானே, அண்டமும் நானே** என்று எழுதப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, 1938ம் ஆண்டுதான் **அணுவை** கண்டுபிடித்தனர். ஆனால் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே **அணுவைப்பற்றி அகத்தியரால்** பழம் நூல்களில் எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே அனைத்து மத நூல்களையும் படித்து தக்க சமயத்தில் அதை ஞாபகத்தோடு அறிவித்தார் என்றாலும் விக்கிரகத்தை அவர் வணங்கியதாக யாரும் இதுவரை கூறவில்லை.

இந்திய தலைமகன், இந்தியா அனைத்துக்கும் **குடியரசு தலைவர்** என்ற நிலையில் நான் அனைத்து மத மக்களின் பிரதிநிதி ஆகும். நான் அனைத்து மதத்தினருக்கும் பட்சபாதமின்றி,மத வித்தியாசமின்றி என்னலான உதவிகளை செய்வேன் என்றார். இந்த இடத்தில்தான் நான் இந்திய மக்களுக்கு பொதுவானவன் என்பதை அறிவித்தார். அதே சமயம் தன் மத கொள்கைக்கு விரோதமாக எந்த விக்கிரக இந்துமத கோவில்களுக்கும் சென்று கைகூப்பி அவர் வணங்கியதில்லை.

இப்படிப்பட்ட வைராக்கியம் நம் கிறிஸ்தவர்களுக்கு குறிப்பாக வரம் பெற்ற ஊழியருக்கு இல்லையே? இயேசுவைப்பற்றி பிரசங்கிக்கும் பிரபல ஊழியர் **சகோ.தினகரன்** அவர்கள் இந்துமத தலைவர் **காஞ்சி மடாதிபதியை** சந்திக்க சென்றபோது அவருக்கு பரிசாக நம் வேத புத்தகத்தை கொடுக்காமல் சங்கராச்சாரியார் தன் பிரயாணங்களில் பூஜை செய்ய வெள்ளியாலான **பூஜை சாமான்களை** விசேஷமாக கடையில் ஆர்டர் கொடுத்து தயாரித்து அதை தன் ஞாபகமாக பரிசு பொருளாக சங்கராச்சாரியார் தன் பயணத்தில் **பூஜை** செய்யும்படியாக அவர் கைகளில் கொடுத்து வந்தாரே? இதற்கு பெயர்தான் **மதசமரசம்** என்பது ஆகும் அல்லது காரியவாதியின் செயல் என்பதாகும். கிறிஸ்தவர்களுக்கு இது சாட்சியில்லா செயலாகும்.

**மக்கள் குடியரசு தலைவர்** என்று முதல்முதல் பெயர் பெற்றவர் திரு.அப்துல் கலாம் அவர்களாகும். இந்தியாவில் **ஜனாதிபதி** பதவி வகித்த வேறு யாருக்கும் **மக்கள் குடியரசு தலைவர்** என்ற சிறப்பு பெயர் கிடைக்கவில்லை.

திரு.அப்துல் கலாம் அவர்களின் மரணத்துக்கு உலக நாடுகள் அனைத்திலிருந்தும் உலக நாட்டு மக்கள், அந்தந்த நாட்டு தலைவர்கள் அவரவர்கள் தேசத்தில் அவர் மரணத்துக்கு சிறப்பு மரியாதை செலுத்தினார்கள். சீனாவிலே,ஜப்பானிலே,அமெரிக்காவிலே, ஆஸ்ட்ரோலியாவிலே அப்துல் கலாம் அவர்கள் படத்தை கையில் ஏந்தியபடி மௌன அஞ்சலி செலுத்தினார்கள். இதற்குமுன் இருந்த எந்த ஜனாதிபதியின் மரணத்துக்கும் இப்படிப்பட்ட **உலக நாடுகளின்** ஒருமித்த மரியாதை கிடைத்ததில்லை.

இந்திய அரசியல் சட்டப்படி ஆட்சியின் முழு அதிகாரமும் பிரதமருக்குத்தான். ஜனாதிபதி பதவி என்பது அதிகாரம் இல்லாத ஒரு **அலங்கார பதவியாகத்தான்** இதுவரை இருந்தது. ஆனால்

திரு.அப்துல் கலாம் அவர்கள் பதவி ஏற்றபின் அவரின் பேச்சு, அவரின் செயல் எந்த நாட்டுக்கு போனாலும் மாணவர்களை சந்தித்து அவர்கள்தான் நாட்டின் எதிர்காலம் என்று கூறி தன்ஆரம்பகால ஏழ்மை வாழ்க்கையும், கூட்டு குடும்பத்தில் தன் பொருப்பான பங்களிப்பையும், பெற்றவர்களையும், மற்றவர்களையும் அவர் கனப்படுத்திய விதம், தன் பள்ளி,கல்லூாரி,விஞ்ஞான படிப்புவரை தான் வளர்ந்து வந்த விதம் உயர்த்தப்பட்டவிதம் இவை யாவும் இந்திய மக்களுக்கு நல்ல முன்மாதிரியாகும்.

## இருதய அடைப்பு நீக்கும் கருவி:
## கலாம் - ராஜீ ஸ்டென்ட

இப்போது **இருதய அடைப்பு** என்ற வியாதி(மாரடைப்பு) மிகப் பெரும்பாலானவருக்கு உண்டாவது சர்வ சாதராணமாகிவிட்டது. இந்த (ஸ்டென்ட்)**அடைப்பு நீக்கி** என்ற சாதனம் மறுபடியும் அடைப்பு உண்டாகாமல் இருக்க ஒரு ஸ்பிரிங்(ஸ்டென்ட்) போன்ற சாதனத்தை அடைப்பு நீக்கப்பட்ட பகுதியில் நரம்பு வழியாக செலுத்தி வைப்பார்கள்.

இதற்கு குறைந்த பட்சம் 2 லட்சம் முதல் 4 லட்சம் வரை பணம் கொடுத்து இந்தியா -ஜெர்மனி ஸ்டென்டுகள் வாங்கவேண்டும். ஏழை மக்கள் லட்சங்கள் செலவு செய்ய முடியாமல் மரித்துப்போகிறார்கள்.

ஆகவே **திரு.கலாம்** அவர்கள் ஆந்திராவில் விஞ்ஞானியாக பணியாற்றும்போது ஹைதரபாத் அரசு மருத்துவமனை தலைமை இருதய நோய் நிபுணர். **டாக்டர்.சோமையா ராஜீவும்,**திரு.கலாம் அவர்களும் இணைந்து குறைந்த விலையில் **மெடிக்கேட்ச் ஸ்டென்ட்** என்ற சாதனத்தை தயாரித்தார்கள். அந்த கண்டுபிடிப்பு மிக வெற்றிகரமாக அமைந்தது. அதன்விலை 2000 ரூபாய் மட்டுமே. 4லட்சங்கள் எங்கே? 2000 ரூபாய் எங்கே? ஆனால் தனியார் மருத்துவமனை இருதய வியாதி நிபுணர்களுக்கு 2000 ரூபாய் ஸ்டென்ட் வாங்கினால் தனியார் ஆஸ்பத்திரிக்கு லாபம் இல்லை என்பதால் கலாம்-ராஜீ என்ற ஸ்டென்டைப்பற்றி நல்ல அபிப்ராயம் கூற தயங்குகின்றனர்.உள்நாட்டு பொருளுக்கு எப்போதுமே மதிப்பு குறைவுதானே?.

டாக்டர்.அர்த்தநாரி அவர்கள் கூறுகிறார்: இதுவரை நான் சுமார் 1000 பேருக்கு **கலாம் - ராஜீ** ஸ்டென்ட் இருதயத்தில் பொருத்தியுள்ளேன். எந்த பிரச்சனையும் இல்லாமல் நல்ல விதத்தில் அவர்களின் இருதயம் இயங்குகிறது. இந்த மகத்தான வெற்றியுள்ள **மலிவுவிலை ஸ்டென்ட்** இந்தியாவில் தயாரிப்பதால் நம் மக்களுக்கு அதை மதிக்க தெரியவில்லை! என்று வருத்தத்தோடு கூறுகிறார். இது திரு.அப்துல் கலாம் அவர்களின் மலிவு விலையில் ஏழைகளுக்காக உதவ அவரின் சிறப்பான கண்டுபிடிப்பாகும். அதுபோல் போலியோ வியாதியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு எடை குறைவாக உள்ள உலோகத்தில் செயற்கை கால் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடிப்பு களிலேயே கலாம் அவர்களின் மனத்துக்கு திருப்தியும்,சந்தோஷத்தையும் கொடுத்த கண்டுபிடிப்பு என்று கலாம் அவர்கள் கூறினார்.

## பொக்ரான் அணுகுண்டு சோதனையின் வெற்றி:

‘ இந்திய விஞ்ஞான வளர்ச்சியில் அவரின் சிறந்த பங்களிப்பு உலக மக்களால் புகழப்பட்டது. குறிப்பாக இந்தியாவிலேயே இந்திய விஞ்ஞானிகளால் இந்திய பொருள்களால் தன் தலைமையில் தயாரித்த முதல் **பொக்ரான் அணுகுண்டு சோதனையை** இந்திய எல்லையில் ராஜஸ்தான் மணல் பரப்பில் வெடிக்க வைத்து உலக நாடுகளை கவனிக்க வைத்த செயல், உலகில் எங்கு யார் தும்மினாலும் அமெரிக்கா கண்டுபிடித்துவிடும் என்று பழமொழிபோல் கூறப்பட்டதை தகர்த்தவர் திரு.அப்துல் கலாம். பொக்ரான் அணுகுண்டை ராஜஸ்தானுக்கு வெடிக்கசெய்ய நீண்ட துாரம் அதை வாகனத்தில் ஏற்றி கொண்டுபோவதை எந்த **ராடர் கருவி** மூலமாகவும் அமெரிக்காவோ,சீனாவோ கண்டுபிடிக்க முடியாத வகையில் கொண்டு சென்று வெடிக்க செய்தது. உலகை வியக்க வைத்தது.

*மறுநாள் தான் அந்த சம்பவத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். அதன்பின் அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு இந்திய விஞ்ஞானிகள்மேல் பெரும் மதிப்பு உயர்ந்தது. அச்செயலுக்கு மூலக்காரணம் திரு.அப்துல் கலாம் அவர்களின் **அற்புதமான ராஜதந்திர ரகசிய** செயல் திட்டமாகும்.*

*இப்படி பல வகையில் சிறப்பு பெற்றவரை **மக்கள் குடியரசு தலைவரை** ஜாமக்காரன் வாசகர்கள் சார்பில் நானும் புகழ் மாலை சூட்டுவதில் பெருமைப்படுகிறேன்.*

*கிறிஸ்தவ ஆலயத்துக்குள் புகழ் அஞ்சலி செலுத்தாது சரியான செயலே என்று உங்கள் கேள்விக்கும் இதன்மூலம் பதில் அளிக்கிறேன்.❖❖❖❖❖❖❖❖❖❖❖❖*

# எது சரியான ஆவியின் நிறைவு?

**கேள்வி:** என் மனைவியும்- நானும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட அனுபவம் உள்ளவர்கள். நாங்கள் வளர்ந்த லூத்தரன் சபையில் எப்போது பார்த்தாலும், பதவி சண்டை,பண ஊழல் காரணமாக நல்ல செய்தி கேட்கவும் கர்த்தரை துதித்து பாடவும் அருகேயுள்ள ஒரு குறிப்பிட்ட பெந்தேகோஸ்தே சபைக்கு சென்றோம். அங்கு தான் எங்கள் ஆவிக்குரிய ஜீவியம் வளர்ந்தது. இருவருக்கும் பரிசுத்தாவியின் அபிஷேகம் கிடைத்தது. என் மனைவியும் அந்நியபாஷை பேசுவாள். நானும் எப்போதாவது பாஷை பேசுவேன். என் மனைவி ஜெபிக்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் அந்நியபாஷை பேசுவாள். ஆனால் நான் அப்படி ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஜெபத்திலும் **அந்நியபாஷை** பேசாததால் என் மனைவி நான் சரியாக அபிஷேகிக்கப்படவில்லை என்றும் உங்களுக்கு உண்மையான அபிஷேகம் வேண்டும் என்றும் கூறுகிறாள். என் பாஸ்டரும்,என் மனைவி கூறுவதைப்போல் நான் சரியாக அபிஷேகிக்கபட வில்லை என்கிறார். நான் அநேகரை இரட்சிப்புக்கு நேராக நடத்தி பலரை ஆதாயப்படுத்தி உள்ளேன். எனக்குள் ஆவிக்குரிய சந்தோஷம் உண்டு. என்னுடைய பிள்ளைகள் பரீட்சை எழுதபோகும்போது என் மனைவியின் ஜெபத்தைவிட என்னிடம் ஜெபிப்பதைத்தான் என் பிள்ளைகள் மிகவும் விரும்புகிறார்கள். என் உறவினர்கள் தங்கள் பிரச்சனைகளை என்னிடம் மட்டுமே பகிர்ந்துக்கொண்டு ஜெபிக்க என் வீடு தேடி வருவார்கள். என்றாலும் என் மனைவியின் பார்வையிலும் என் பாஸ்டரின் பார்வையிலும் நான் சரியாக அபிஷேகம் பெறாதவன் என்றுதான் கருதப்படுகிறேன். உங்களை நாங்கள் இரண்டுமுறை நேரில் சந்தித்துள்ளோம். என்னுடைய ஜெப வாழ்க்கை வேத வாசிப்பு, வேத வசன தியானம் மிக நன்றாக இருக்கிறது. ஆனால் என் மனைவியின் வாழ்க்கையில் வேத வாசிப்பு குறைவு. மேலும் மற்றவர்களுக்காக அவள் ஜெபிப்பதில்லை. அவள் கோபத்தில் உபயோகிக்கும் வார்த்தைகள் இவைகளெல்லாம் காணும்போது என் மனைவியின் ஆவிக்குரிய ஜீவியம் என்னைவிட மிக மிக குறைவுள்ளது என்றாலும் நான் சரியாக அபிஷேகிக்கப்பட்டவில்லை என்கிறாளே!. அது என்னை வேதனைப்படுத்துகிறது. இதனால் எனக்கு மனசமாதனமில்லை?.

**பதில்:** *உங்கள் நீண்ட கேள்வி கடிதம்போல் இருக்கிறது. பெந்தேகோஸ்தே சபைகளில் சில பெலவீனங்கள் உண்டு. நீங்கள் பரிசுத்தாவியானவரின் நிறைவை பெற்றதற்கு அவர்களைப் பொருத்தவரை **அந்நியபாஷை அடையாளம்தான் மிக முக்கியம்.** அந்த பாஷைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்காதது உங்கள் மனைவியின் பார்வையில் உங்கள் பாஸ்டரின் பார்வையில் நீங்கள் சரியாக அபிஷேகம் பெறவில்லை என்று நினைத்து அவர்களாகவே முடிவுகட்டிவிட்டனர். நீங்கள் உங்கள் சபையில் கவனித்திருப்பீர்களே? சபையினர் ஜெபநேரத்தில் **மிகுந்த சத்தத்துடன் அல்லேயா** கூறுகிறதைக்கண்டிருப்பீர்கள், **கைகளை** வேகமாக தட்டி **ஜன்னி** வந்ததுபோல் உடலும்,*

**கைகளும்** நடுங்கிக்கொண்டிருப்பவர்களை பார்த்திருப்பீர்களே? மேலும் பாம்பு சத்தம் இழுவதுபோல் அடிக்கடி **ஸ்ஸ்ஸ்** என்று ஜெபிப்பவர்கள் வாயிலிருந்து சத்தம் வரவேண்டும். அது **ஸ்தோத்திரம்** என்பதின் **குருக்கெழுத்து** அப்படி சிலர் சத்தம் இடுவதை பார்த்திருப்பீர்களே!, டிவியில் கூட அதை பார்த்திருப்பீர்களே? சிலர் **பற்களை** கடித்து **முகத்தை சுருக்கி,** கண்களை இருக்கி **மூல வியாதியஸ்தர்கள்** காலையில் கஷ்டப்படுவதுபோல ஜெபவேளையில் அவர்கள் முகம் அப்படி மாறும். உங்கள் முகமும் அப்படி மாறினால்தான் நீங்கள் நிறைய அபிஷேகம் பெற்றுவீட்டீர்கள் என்று உங்கள் மனைவியும்,பாஸ்டரும் மற்றவரும் நம்புவார்கள்!.

அடிக்கடி **இரண்டு கைகளை** உயர்த்தி சபையில் உள்ள மற்றவர்களை விட நீங்கள் எவ்வளவுக்கொவ்வளவு **அல்லேலுயா** வார்த்தையை மிகச்சத்தமாக கூறுகிறீர்களோ அப்போதுதான் மற்றவர் பார்வையில் நீங்கள் கூடுதல் அபிஷேகம் பெற்றீர்கள் என்று நம்புவார்கள். பாஸ்டர்கள் பிரசங்கிக்கும்போது வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் இருக்கிறதோ, இல்லையோ **கை உயர்த்தி** எல்லாரும் **அல்லேலுயா** கூறுங்கள் என்று கூறும்போது நீங்கள் கைகளை உயர்த்தாவிட்டால் பாஸ்டர் உங்களை சரியாக அபிஷேகிக்கபடவில்லை என்று கூறுவார். அவர் பார்வைக்காவது அடிக்கடி **கைகளை உயர்த்தி அல்லேலுயா** கூறுங்கள். சபையில் பெரும்பாலான விசுவாசிகளும் பாஸ்டர்களும் அப்படியேதான் நடிக்கிறார்கள். நீங்கள் நடிப்பை விரும்பவில்லை. ஆகவே ஒதுக்கப்படுகிறீர்கள்.

' இரண்டு வாரங்களுக்குமுன்(2015 ஜுலை) டிவியில்(சென்னை) **AOG** சபை **பாஸ்டர்.மோகன்** அவர்களின் ஆராதனையை கவனித்துக் கொண்டிருந்தேன். அன்று அவர் மிக நல்ல செய்தியை பகிர்ந்துக்கொண்டார்கள். பல விஷயங்களை கண்டித்தும் பேசினார். ஆனால் அவர் தான் செய்த பிரசங்க நேரத்தைவிட **இரண்டு கைகளை உயர்த்தி அல்லேலுயா** கூறுங்கள்!, **ஆமென்** கூறுங்கள்! என்று சபை மக்களை பார்த்து நிமிடத்துக்கு ஒருமுறை அப்படி கூறியதுதான் மிகையாக இருந்தது. **விவாகரத்து செய்பவர்கள்** நிச்சியாக **படுபாதாளத்தில்தான்** போவார்கள் என்று உணர்ச்சி பூர்வமாக சத்தமாக பாஸ்டர்.மோகன் கூறினார். விவாகரத்து செய்தவர்கள் அந்த ஆராதனையில் அதிகம் பேர் உண்டு என்று அறிந்தும் மிக **தைரியமாக பாதாளத்தில் போவார்கள்** என்று பாஸ்டர்.மோகன் கூறியவரை OK. ஆனால் அப்படி அவர் கூறிய உடனே **எல்லாரும் இரண்டு கைகளை உயர்த்தி அல்லேலுயா, ஆமென்** கூறுங்கள் என்று அவர் கூறியபோது எனக்கு பாஸ்டர்.மோகன் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு அறியாமல் அப்படி அல்லேலுயா கூற சொன்னாரா? என்று எண்ணி மிகவும் என் மனம் கஷ்டப்பட்டது. நல்ல அனுபவமுள்ள பாஸ்டர்,AOG பாஸ்டர்களின் தலைவரான பாஸ்டர்.மோகன் அவர்கள் விவாகரத்து செய்தவர்கள் **படுபாதளத்துக்கு போவதைக்குறித்து** சபை ஜனங்களை சந்தோஷப்பட சொல்கிறாரா? எதற்கு இரண்டு கைகளை உயர்த்தி சொல்லி அடிக்கடி சபை மக்களை அல்லேலுாய கூறச் சொல்கிறார்?. சபை மக்களை எதற்காக **அல்லேலுயா** என்று கூற வைக்கிறோம் என்பதை அவர் யோசிக்காமல் அப்படி சொல்லிவிட்டாரா? அந்த ஜனங்களும் ஆராதனை முடியும்வரை டிரில் மாஸ்டர் சொல்வதைகேட்டு பள்ளிப்பிள்ளைகள் கீழ்ப்படிவதைப்போலவும் பிள்ளைகள் உடல் பயிற்சி செய்வதைப்போலவும் **கைகளை உயர்த்துவதும் கீழே** இறக்குவதுமாக அந்த ஆராதனை உடற்பயிற்சி ஆராதனையாக அமைந்தது. வார்த்தைக்கு வார்த்தை **கை உயர்த்த** சொன்னதால் அந்த ஆராதனையில் கலந்துக்கொண்ட பெரும்பாலான சபை மக்கள் **கைகளும்** துாக்கவில்லை, **அல்லேலுயாவும்** கூறவில்லை. சலித்துப்போனார்கள். பாவம்? கைகளை துாக்க சொல்ல ஒரு அளவு வேண்டாமா?

இப்படிப்பட்ட பெந்தேகோஸ்தே பாரம்பரியத்தில் இணைந்துவிட்ட உங்களை மேலே கூறியபடி **ஜெபத்தில் நடுக்கம், கைதட்டுதல், பற்களை கடித்தல்** இப்படிப்பட்ட **சேட்டைகள்** உங்களில் காணப்படாததால்தான் உங்கள் **மனைவி,பாஸ்டர் யாவரும் உங்களுக்கு ஆவியின்**

அபிஷேகம் சரியாக இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

(FMPB,விஷ்வவாணி )மறைந்த சகோ.**எமில் ஜெபசிங்** அவர்கள் தன் பாடலில் ஒரு வரி இப்படி எழுதினார்.

பாவி என்றென்னைப் பலர் தள்ளினர்
**ஆவி இல்லை என்றிகழந்தும் விட்டார்**
ராஜா உம் அன்பு என்னை கண்டது
உம்மைப்போல் ஐயாஎங்கும்கண்டதில்லை (கர்த்தனே எம் துணையானீர்) நல்ல அர்த்தம் நிறைந்த பாடல் வரிகளுக்காக தேவனைதுதிக்கிறேன்.

உண்மையாய் இரட்சிக்கப்பட்ட உங்களைப்போன்றவர்களை **ஆவியில்லை** என்று ஒதுக்கும் ஒரு கூட்டம் உண்டு. **சரியாக இரட்சிக்கப்படாத** உங்கள் மனைவி உங்கள் பாஸ்டர் அந்த கூட்டத்தில் உள்ளவர்களாகும். உங்கள் ஆவிக்குரிய விஷயத்தைக்குறித்து யார் என்ன சொன்னாலும் (ஆவியின் கனிகளில் ஒன்றான) **நீடிய சாந்தம் மூலமும், உங்கள் சாட்சியின்** மூலமும் செயலிலும், உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை காட்டுங்கள். அதுபோதும். ஜெபத்தில் சத்தம்போடுபவர்கள், சத்தம் போடட்டும், பாஷை பேசுபவர்கள் **பாஷை பேசட்டும்.** அவைகளை கண்டு ஏமார்ந்து விடாதீர்கள். உங்கள் சாட்சியின்மூலம் உங்கள் ஜெப வாழ்க்கையின்மூலம் உங்கள் மனைவி உங்களை புரிந்துக்கொள்ளும் காலம் வரும். அதுவரை மனைவியிடத்தில்உள்ள **மாய்மால பாஷையை** மனைவியே புரிந்துக்கொள்ள செய்யும் ஆண்டவரே என்று மட்டும் கர்த்தரிடம் ஜெபியுங்கள். மனைவியிடம் வாக்குவாதம் செய்யவேண்டாம். அது போதும்.

உங்களுக்குள் ஆவியானவர் உண்டா? இல்லையா? என்பதற்கு எந்த மனுஷனுடைய சர்டிபிகேட்டும் தேவையில்லை. ரோமர் 8ம் அதிகாரத்தில் கூறப்பட்டதைப்போல் **உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை நீங்களே அறிவீர்களே** என்று பவுல் கூறியதைப்போல் நீங்கள் அதை உணர்ந்து செயலில் காட்டினாலே போதும். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

## அந்நியபாஷையில் பிசாசை துரத்தும் பாஸ்டர்:

சகோ.**ஆல்வின் தாமஸ்** அவர்கள் டிவி நிகழ்ச்சியில் தன் சபையில் நடக்கும் ஆராதனையை காட்டுகிறார். ஒரு சகோதரியின் கேன்சர் சுகமானது என்று சாட்சி கூற வைக்கிறார்கள். அந்த பெண்ணின் தாயும் சாட்சி கூறுகிறார். மகள் கேன்சர் வியாதியால் ஆஸ்பத்திரியில் தூங்கமுடியாமல் தவிக்கிறாள். நான் பாஸ்டர் தாமஸ் அவர்களின் சபைக்கு அவளை அழைத்து சென்றேன். உன் கேன்சர் சுகமாவதை காண்கிறேன் என்றார். அன்று மாலை ஆஸ்பத்திரியில் என் மகளை **அந்நியபாஷை** பேசி மனநோய் பிடித்தவளைப்போல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தாள். எல்லாரும் அவளை பிடித்து படுக்கவைத்தார்கள். அன்று இரவு அவள் நிம்மதியாக தூங்கினாள். ஆகவே இன்று சபைக்கு வந்து சாட்சி கூறுகின்றேன் என்றாள். அப்போது பிளாஷ்பேக்காக பாஸ்டர் ஆல்வின் தாமஸ் ஜெபிக்கும்போது அவர் ஒவ்வொரு வியாதியின் பெயரை வரிசையாக கூறி முடிவில் கேன்சர் வியாதிக்காக ஜெபிக்கிறேன் என்றார். அதை டிவியில் காட்டுகிறார்கள். அதன்பின் எல்லாரும் **அந்நியபாஷையில்** சத்தமாக ஜெபியுங்கள் என்றார். **அந்நியபாஷை பேசி பிசாசை விரட்டுங்கள்** என்று கூறி பெரும் கூக்குரலோடு ஜெபித்தார். அன்று பாஸ்டர் ஆல்வின் தாமஸ் செய்த அந்த ஜெபத்தைத்தான் இந்த பெண் டிவியில் சாட்சி கூறினார். பொதுவாக எல்லா வியாதி பெயர்களையும் பாஸ்டர் கூறி ஜெபித்த போது **கேன்சர் வியாதி** சுகமாகட்டும் என்று அவர் கூறியது **இவளுக்காக மட்டும்** அவர் அப்படி கூறி ஜெபித்தாக மிகைப்படுத்தி அந்த பெண் சாட்சி கூறினார். அவளின் கேன்சர் சுகமானதாக எந்த பயாப்சி ரிப்போர்ட்டும் கூறவில்லை. இப்படித்தான் பல **பொய் சாட்சிகள்** டிவியிலும்,சபையிலும் கூறப்படுகின்றன. இதில் **தமாஷ்** என்னவென்றால் பாஸ்டர்.ஆல்வின் தாமஸ் **பிசாசை விரட்ட அந்நியபாஷையை** பயன்படுத்தியதுதான்!.

பொதுவாக பெந்தேகோஸ்தே சபையினர் கூறுவது என்ன? **அந்நியபாஷை** பிசாசுக்கு புரியாது. அதனால்தான் கர்த்தர் அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னார் என்பதுதான். இப்போது ஜெபத்தில் அந்நியபாஷையில் பிசாசை இவர்கள் விரட்டினால் பிசாசுக்கு எப்படி அந்த பாஷை விளங்கும்?. இந்த சின்ன விஷயத்தைக்கூட பெந்தேகோஸ்தே சபையினர் சிந்திக்க முயற்சி எடுக்கவில்லையே?.

இதில் இவர்களின் **அந்நியபாஷையின் பொய்** வெளிபடுகிறதல்லவா? எத்தனை துணிகரம்? மக்கள் இப்படிப்பட்ட அந்நியபாஷையை உண்மையென்று நம்புவது எத்தனை பெரிய அறியாமை. பாஸ்டர்.ஆல்வின் தாமஸ் அவர்கள் அந்நியபாஷையில் பிசாசை விரட்டும் வீரர் ஆகிவிட்டார்.

பெந்தேகோஸ்தே சபையினரை பார்த்து இந்த விஷயத்தில் பரிதாபப்படுகிறேன். வெட்கப்படுகிறேன்!.

**நான் ஆவியானவர் இல்லை என்று கூறவில்லை.**
**நான் ஆவியானவருக்கு விரோதி அல்ல.**
**பொய்யாய் அந்நியபாஷை பேசும் யாரையும்**
**நான் நம்புவதில்லை. அவர்கள் அந்நியபாஷை**
**பொய் என்றால் அவர்கள் ஊழியமும் பொய்.**
**கூடியவரை அந்நியபாஷை பேசும் யாரையும்**
**வாசகர்கள் நம்பாதீர்கள்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# அந்நியபாஷை

**கேள்வி:** நீங்கள் சொல்வதுபோல் நான் **அந்நியபாஷை** பேச பிரியப்படவில்லை. பேசும் அத்தனைபேரையும் பார்க்கும்போதே அவர்கள் பேசுவது மிகவும் போலி என்றும் பொய் என்றும் விளங்குகிறது. ஆனால் நான் தினமும் ஆவியானவரால் நிரப்படவிரும்புகிறேன். அதற்கு தாங்கள் கூறும் வழி என்ன?

**பதில்:** ஆவியானவரின் துணை இல்லையென்றால் நம்மால் பரிசுத்தமாக வாழமுடியாது. சாட்சியாகவும் வாழமுடியாது. அதனால்தான் அப் 2ம் அதிகாரத்தில் பரிசுத்தாவி உங்களிடம் வரும்போது **பெலப்பட்டு,புறப்பட்டு சாட்சியாய் வாழ்வீர்கள்** என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த மூன்று காரியங்களும் நடக்க பரிசுத்த ஆவியானவர் நம்மோடு நமக்குள் இருந்தால்தான் முடியும். பரிசுத்த ஆவியானவரால் **ஒவ்வொரு முறையும்** நிரப்பப்படவேண்டும் என்று கேட்பது பெட்ரோல் பங்க்(கேஸ் ஸ்டேஷனில்) பெட்ரோல் பிடிப்பதுபோல் ஆகும். பரிசுத்த ஆவியானவரால் தினசரி நிரப்பப்படவேண்டும் என்றால் இரவு பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வேண்டாமா? காலை நிரப்பி பகல் முழுவதும் செல்ல நாம் ஒரு வாகனம் அல்ல. இரவில் பாவம் வராதா? தவறு செய்யமாட்டோமா? அதனால்தான் **ஆவியானவரால் எப்போதும் நிறைந்திருங்கள்** என்று வேதம் கூறுகிறது. எப்போதும் நிறைந்திருங்கள் என்றால் எல்லா நேரமும் எல்லா காலமும் எல்லா நாட்களும் ஆவியானவரின் ஆளுகைக்கு நம்மை முழுவதுமாக விட்டுக்கொடுப்பது ஆகும். அதற்கு **ஆவியானவர் நமக்குள் இருந்தால் அல்லது வாழ்ந்தால்தானே முடியும்**. எப்போதும், என்றென்றுமாய் நம்மோடு ஆவியானவர்கூட இருக்கும் திட்டத்தில் தான் இயேசுகிறிஸ்து நமக்கு உதவி செய்ய வாக்கு அருளியிருக்கிறார். யோ 14:16ல்,எபே 4:30,எபே 1:13, யோ 14:23,24ஆகிய வசனங்களில் எல்லாம் இதைத்தான் போதிக்கிறது. இதற்காகத்தான் **இம்மானுவேல்** என்று பிதா அளித்த பெயருடன் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வந்தார்.

இந்த அடிப்படை தத்துவத்தை விளங்கிக்கொண்டு சரியானப்படி நீங்கள் மனந்திரும்பினால்போதும் ஆவியானவர் **உள்ளே வந்துவிடுகிறார்**. எபே 1:13ல் கூறுகிறது. ஆவியானவர் தினசரி நிரப்பப்பட வேண்டியவர் அல்ல. தினசரி எல்லா நேரமும் நம்மோடு,நமக்குள் இருப்பவர் ஆகும்.

எப்போதும் இரவும் பகலும் நம்மோடு நமக்குள் நிறைந்து இருந்து வழிநடத்துபவர். இந்த அனுபவம் உங்களுக்கு இருந்தால் **ஆவியானவரே வாரும்** என்று கெஞ்சமாட்டீர்கள். இயேசுவே **ஆவியானவரை அனுப்பும்** என்று முட்டாள்தனமாக கேட்கமாட்டீர்கள்!.

மேலே குறிப்பிட்ட ஆழமான அனுபவத்தை பெற வாஞ்சியுங்கள். உங்கள் கவலை பயம் எல்லாம் நீங்கும். வேதனை அவமானம் யாவற்றிலும் நீங்கள் ஸ்தோத்திர பாட்டை பாடமுடியும். அதோடு எல்லா நேரமும் சந்தோஷமாகவும் இருக்கமுடியும்.

# மொட்டை கடிதம்

**கேள்வி: FMPB க்கு வந்த மொட்டை கடிதம் குறித்து தீ மாதிரி எல்லா இடங்களிலும் பரவி பேசப்படுகிறதே!, நீங்கள் எப்படி அதை விமர்ச்சிக்காமல் அமைதி காக்கிறீர்கள்?.**

**பதில்:** FMPB மட்டுமல்ல, IEM,BYM,Dr.புஷ்பராஜ்க்கும், எல்லா டையோசிஸ்களுக்கும், பிஷப்மார்களுக்கும்,எல்லா ஊழியர்களுக்கும் கண்டிப்பாக மொட்டை கடிதங்கள் வராமல் இருக்காது. ஆனால் அந்த மொட்டை கடிதங்களில் எழுதப்பட்ட குற்றசாட்டுகளை அலட்சியப்படுத்தாமல் **சரிப்படுத்தபடவேண்டிய குற்றச்சாட்டுகள்** எதுவோ அதை சரிப்படுத்திக்கொண்டால் ஸ்தாபனம் மக்களின் பார்வையிலும்-கர்த்தரின் பார்வையிலும் சிறப்பானதாக விளங்கும்.

ஒரு ஸ்தாபனத்தில் நடக்கும் அக்கிரமங்களை, மேலதிகாரிகள் செய்யும் தவறுகளைக்குறித்து முதலாளியிடம் அல்லது மேனேஜரிடம் அல்லது டைரக்டரிடம் யாரும் நேரில் சென்று தைரியமாக கூறமாட்டார்கள். இப்படி மொட்டை கடிதங்கள் மூலமாகத்தான் அறிவிக்கமுடியும். ஆனால் டையோசிஸ்பற்றி அல்லது ஸ்தாபனத்தைப்பற்றி உண்மையான பாரம் கொண்டவர்கள் ஸ்தாபனத்தின் நன்மைக்காக வளர்ச்சிக்காக அங்கு நடக்கும் தவறுகளை மொட்டை கடிதம் மூலமாகத்தான் அறிவிக்கமுடியும். இது நல்ல நோக்கத்தின் அடிப்படையில் செய்யும் காரியம்.

ஆனால் சிலரை கவிழ்க்க,வஞ்சம் தீர்க்க ஒருவரின் உயர்ச்சியை கண்டு பொறுக்கமுடியாமல் பொறாமை காரணமாக தீய நோக்கத்தோடு பொய்யான தகவல்களை எழுதி மொட்டை கடிதமாக அனுப்புபவர்கள் கர்த்தரின் பார்வையில் அருவருப்பானவர்கள். அப்படி எழுதுபவர்கள் மக்களிடம் பிடிப்படுகிறார்களோ இல்லையோ - ஆனால் கர்த்தர் அவர்களை நிச்சயம் தண்டிப்பார்.

ஆகவே உங்கள் கேள்வியின்படி மொட்டை கடிதம் நல்ல நோக்கத்தோடு எழுதப்பட்டதா? தீய நோக்கத்தோடு எழுதப்பட்டதா? என்பது அந்த கடித்தில் உள்ள விஷயத்தை பொருத்தது. நல்ல நோக்கத்தோடு ஸ்தாபனத்தின் நன்மைக்கு வேண்டி எழுதப்பட்ட குற்றச்சாட்டு உண்மையாக இருந்து அதற்கான ஆதாரங்களும் அந்த கடிதத்தில் சுட்டிகாட்டியிருந்து ஸ்தாபன தலைவர்கள் நடவடிக்கை எடுக்காமல் போனால் பொதுமக்கள் அறிய,சபைமக்கள் அறிய ஜெபகுழு தலைவர்கள் அறிய சிலர் அந்த மொட்டை கடிதத்தையே துண்டுபிரதியாக அச்சடித்து பகிரங்கப்படுத்துவார்கள்.

அப்படி குற்றசாட்டுகளை பொதுமக்கள் அறிந்தும் மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையானால் அவர் யாரையோ காப்பாற்ற முயலுகிறார் அல்லது அந்த குற்றச்சாட்டில் அந்த மேலதிகாரிகளுக்கும் ஸ்தாபன தலைவர்களுக்கும் பங்கு உண்டு என்று அர்த்தமாகிவிடும்.

எந்த மொட்டை கடிதங்களையும் அற்பமாக எண்ணி தூக்கி வீசாமல் தீர விசாரித்து சரியான ஆதாரங்கள் கிடைக்குமானால் குற்றவாளி தண்டிக்கப்படவேண்டியது அல்லது நீக்கப்படவேண்டியது அவசியம் ஆகும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நக்கீரன் செய்தி:

**கேள்வி:** AOG சபை பாஸ்டர்.அருள் அவர்கள் வீட்டை போலீஸ் சூழ்ந்தது என்று நக்கீரன் பத்திரிக்கையில் வந்த செய்தியை பார்த்தீர்களா?.



**பதில்:** *பார்த்தேன். நிறைய வாசகர்கள் அதை போட்டோ காப்பியும் எடுத்து எனக்கு அனுப்பிவைத்தனர். இந்த சம்பவத்தில்* **பாஸ்டர்.அருள்** *அவர்கள் அகப்படவில்லை. அவரின் எதிரிகள் சிலர் செய்த திட்டமிட்ட சூழ்ச்சியாக கருதுகிறேன். இரவு நேரத்தில் சிறு பெண் பிள்ளைகளுடன் பாஸ்டர்.அருள் லீலை என்று பல புகார்கள் மதுரை போலீஸ் நிலையத்துக்கு வந்தது. குறிப்பிட்ட நாள் அன்று சிறு பெண்பிள்ளைகளுடன் பாஸ்டர் தவறு செய்கிறார் என்ற தகவலின் அடிப்படையில் போலீஸ் தலைமை அதிகாரி பெண் போலீஸ் ஆகியவர்கள் அடங்கிய படைகளோடு ஏதோ தீவிரவாதிகளை பிடிப்பதைப்போல இரவு வீட்டை சுற்றி போலீஸ் பதுங்கியிருந்து நடுஇரவில் திடீரென்று போய் பாஸ்டர்.அருள் அவர்களின் வீட்டில் புகுந்து அவருடைய படுக்கை அறைக்குள் நுழைந்தது. ஹாஸ்டல் பிள்ளைகள் சிலர் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தனர். ஆனால்* **பாஸ்டர்.அருள்** *அவர்கள் ஊரிலேயே இல்லை. அந்த நேரத்தில் பாஸ்டர்.அருள் இருந்திருந்தால் கைது செய்யப்பட்டு மிகப்பெரிய அவமானத்திற்குள்ளாகியிருப்பார்.*

*போலீஸ் வீட்டிற்குள் நுழைந்த செய்தி பாஸ்டர்.அருள் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அங்கிருந்து போலீசரிடம் பேசி போலீசை கடிந்துக்கொண்டார்.*

*போலீஸ் தவறான தகவலின் அடிப்படையில் வீட்டுக்குள் புகுந்துவிட்டோம். பொருத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டதாக செய்தி.*

*இதில் முதல் தவறு பாஸ்டர்.அருள் அவர்கள் வளர்த்தும் ஏழைப் பெண்பிள்ளைகள் இரவு நேரத்தில் தூரத்தில் உள்ள விடுதியிலிருந்து பாஸ்டர் வீட்டில் இரவு படுத்துறங்கியது.*

*பிரபல கிறிஸ்தவ* AOG *சபையில் தலைமை பாஸ்டர்களில் ஒருவரின் வீட்டில் தவறான தகவலின் அடிப்படையில் தகவல் உண்மையா? இல்லையா? என்பதைக்கூட உளவுதுறையினர் சரியாக அறியாமல் உயர் போலீஸ் அதிகாரிகள் இரவு நேரத்தில் பாஸ்டர் வீட்டை சுற்றி வளைத்தது. போலீஸ்துறையின் அலட்சியத்தையும்,பலவீனத்தையும் காட்டுகிறது. இது கண்டிக்கதக்கதாகும் என்று மதுரையில் உயர் அதிகாரிகள் கூறியதாக கேள்விப்படுகிறோம்.*

*பாஸ்டர்.அருள் அவர்களை அவமானப்படுத்த அவர்கூட உள்ள பலர் பல வருடங்களாகவே முயல்வதாக அறிகிறோம். ஊழியர்கள் தங்களோடுயுள்ளவர்களிடம் மிக எச்சரிக்கை இருக்க வேண்டும்.* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

**இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கிறிஸ்தவசபைகள் தாக்கப்படுகின்றன. சபை ஊழியர்கள், மிஷனரிகள் தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள் என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில்செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து UNITED CHRISTIAN FORUM என்ற பெயரில் உதவி இணைப்பு** Help Line **தொடங்கியுள்ளார்கள். உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் 1800 2084 545 என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.**

# கள்ள போதகர்கள் -DVD

2015 ஜுன் மாத ஜாமக்காரனில் கள்ளபோதனைகளை கிறிஸ்தவ மக்களுக்கு அடையாளம் காட்ட பிழையான உபதேசம் கொண்ட ஊழியர்கள் சிலரை வீடியோவில் பதிவு செய்து Warning: **A Mission Against Antichrist** என்றழைக்கப்படும் குழுவினர் வெளியிட்ட DVDஐ பற்றி குறிப்பிட்டு அவர்களின் விலாசமும் Website விவரமும் வெளியிட்டிருந்தேன். பலர் அவர்களோடு தொடர்புகொண்டும் பதில் கிடைக்கவில்லை என்று எனக்கு அறிவித்தார்கள். ஆகவே என்னிடத்தில் இருந்த அந்த குறிப்பிட்ட DVDஐ காப்பி எடுத்து அந்த DVDஐ ஒரு சிலருக்கு மட்டும் அனுப்பி வைத்தேன். அந்த DVDயின் விளக்கம் சரியில்லை. ஆகவே அந்த டிவிடியை கேட்டு எனக்கு எழுதவேண்டாம். அந்த DVDஐ வேறு வடிவில் **தற்கால ஊழியர்களின் போலி உபதேசங்களையும்** அதோடு சேர்த்து குறிப்பிட்டு எனக்கு கிடைத்துள்ள பழைய DVDலிருந்து சிலவற்றை சரிசெய்து ஒழுங்கான முறையில் ஊழியர்களின் தவறுகளை சரியான விளக்கத்தோடும் ஆதாரத்தோடும் வெளியிட்டு இணைத்து வேறொரு **எச்சரிக்கை DVDஐ** வெளியிட முயற்சிகள் நடந்துக்கொண்டிருக்கிறது.

சகோ. G.பொன்னுதுரை ஜோசப் என்பவரும், செல்வராஜ் என்பவர்களும் தன்னுடைய U-Tubeல் மூலம் மிக அற்புதமாக மிக **தெளிவான புகைப்பட ஆதாரத்துடன்** வசன விளக்கத்துடன் கள்ள ஊழியர்களைப்பற்றி விவரங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரை உலகின் பல லட்சக்கணக்கான மக்கள் அதைக் கண்டு மிகவும் ஆச்சரியமும் விழிப்புணர்வும் கொண்டு உணர்த்தப்பட்டார்கள்.

நம் கிறிஸ்தவர்கள் குறிப்பாக வேதத்தை சரியாக முறையாக வாசிக்காதவர்கள் அந்த **கள்ள ஊழியர்களை** தங்கள் ஹீரோவாகவும்,தங்கள் தலைவனாகவும் அவர்களை விக்கிரகமாகவும் ஆக்கி அவர்களை பின்பற்றுகிறார்கள். அது மிகவும் பரிதாபம். இவர்கள் தாங்கள் யார் பின்னால் போகிறோம் என்பதைக்கூட அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல அந்த கள்ள ஊழியர்கள் நூற்றுக்குநூறு உண்மையானவர்கள் என்றும் அவர்கள் பொய் சொல்லமாட்டார்கள் என்றும் இவர்கள் மிகவும் நம்பிவிடுவதுதான் மிகப் பெரிய **மோசடியும் வஞ்ஜனையாகவும்** இருக்கிறது.

' பலருக்கு **இளம்பங்காளர் திட்டம் பொய்** என்றும் அது **கர்த்தர் சொல்லாத திட்டம்** என்று நன்றாக அறிந்திருக்கிறார்கள். **ஜெபகோபுர திட்டம் ஒரு வியாபார திட்டம்** என்றும் இவர்களுக்கு தெரியும். **ஆசீர்வாத தங்க சாவி திட்டம்** பொய்யானது. **உடன்படிக்கை பெட்டியில் பத்திரங்கள்** வைத்து ஜெபிப்பது என்ற பணக்காரர்களுக்கென்றே உருவாக்கப்பட்ட ஏமாற்று திட்டம். இப்படி பல திட்டங்கள் கர்த்தரின் பெயரை உபயோகித்து **தந்தையும்,மகனும்** மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று இவர்களுக்கு நன்கு தெரியும். இவர்களில் பலர் இதைக்குறித்து இவ்வளவு **பெரிய ஏமாற்று ஊழியம் செய்கிறார்களே** என்று மிகவும் கவலைப்படுவது போல் என்னிடம் பொய் வேதனையுடன் பேசினார்கள். ஆனால் இன்றும் காலை சகோ.தினகரன் பாடும் பாடல் கேட்காமல் இவர்கள் ஜெபம் செய்வதில்லை. **சகோ.தினகரன் பாட்டு காரில் போட்டு ஒரு சரணம்** கேட்டபின்தான் கார் இயக்குவது டெலிபோன் **ரிங்டோன்** முதல் சகோ.தினகரன் பாடலை பதிவுசெய்துள்ளார்கள். ஆனால் என்னிடம் இவர்கள் பேசும்போது தினகரன் குடும்பம் முழுவதும் **பொய்யர்கள்** என்றும் பகிர்ந்துகொள்கின்றனர்.

இப்படி இரட்டை போலி வாழ்க்கை வாழும் பெரும் பணக்காரர்கள் நெல்லை,தூத்துக்குடியில் வியாபாரம் செய்கின்றனர். இவர்களை என்ன சொல்வது?.இவர்களுக்கு சகோ.தினகரன் சத்தம் ஆசீர்வாதம் கொடுக்குமா? சகோ.தினகரன் பாட்டு அந்த நாளை ஆசீர்வாதமாக்கி தருமா? இப்படியும் ஏமாறுவார்கள்?.

## உதாரணமாக இந்த குறிப்பிட்ட U-TUBEல்

Internetல் கூகுள் சென்று U-Tubeல் கீழ்காணும் ID கிளிக் செய்து பாருங்கள்.

1). Ponnudurai joseph - http://youtube/@vdapjuhlt@feature = youtube.be

இவைகளில் பல தலைப்பில் தமிழிலேயே கள்ள ஊழியர்களின் பட்டியலும் வீடியோ, காட்சியும் காணப்படுகிறது. கீழ்காணும் தலைப்பில் அவைகளை நீங்கள் காணலாம்.

1). கிறிஸ்தவ ஜோக்கர்கள்

2). கடவுள் என்ன கந்துவட்டி நடத்துகிறாரா?

3). அந்நிய ஆவிகளின் அபிஷேகங்கள்

4). பாஸ்டர்.ஆபிரகாம் சார்லஸ் காமலீலைகள்

5). தேவதூதர்களோடு சாப்பிடுகிறேன்(பாஸ்டர். விக்டர் ஞானராஜ்.திருச்சி)

6). கோமாளி கூத்துக்கள் ஒருநாளும் தேவ மகிமையாகாது.

7). Kundalini & Kiriyas warning pastor.Brito

8). Toranto Blessing காட்சிகள்

9). Bennihin says DGS Dhinakaran is a Liar

10). Augustin Jebakumar(Gems) Joins false prophets list இதைப்போல் இன்னும் நிறைய வேறு தலைப்புகளில் பல கள்ள ஊழியர்களைப்பற்றிய வீடியோ படங்களும் விளக்கங்களும் காட்டப்படுகின்றன.

## RUHA - Pastor.ALWIN THOMAS-CHENNAI



இவர் டிவியில் கூச்சம் இல்லாமல் சொல்லும் பொய்களை பார்க்கும்போது டிவியை பார்க்கும் நமக்கே கூச்சமும் ஆவிக்குரிய பெருத்த வேதனையையும் தருகிறது.

ஆல்வின் தாமஸ் கூறிவதாவது: ஆல்வின் தாமஸாகிய என்னைப்பற்றி யாரும் சரியாக அறிந்துக்கொள்ளவில்லை என்று தன் சபை மக்களை பார்த்து கூறுகிறார். இவர் ஆராதனைக்கு வரும் விசுவாசிகளின் எண்ணிக்கை குறைந்ததால் இப்போது அவருக்கு சபை மக்கள்மேல் கோபம் உண்டானது. அதனால் வெளி வந்த வார்த்தைதான் இது.

என்மேல் உள்ள அபிஷேகம் மிகவும் வித்தியாசமானது. பலத்த வல்லமை அபிஷேகம் என்னை மூடியிருக்கிறது.

இப்படி 50 பேர்களுக்கு பிரசங்கிக்க கர்த்தர் என்னை தெரிந்தெடுக்கவில்லை. **50000 மக்களுக்கு** பிரசங்கிக்க தான் என்னை கர்த்தர் தெரிந்தெடுத்து கர்த்தர் பெருத்த வல்லமையால் என்னை மூடியிருக்கிறார். என் நேரத்தை **50 பேர்களுக்கு பிரசங்கித்து வீணாடிக்க நான்** விரும்பவில்லை. 6000 பேர்களுக்கு பிரசங்கிக்க வேண்டிய ஆராதனையை கேன்ஸல் செய்துவிட்டு இங்கு வந்திருக்கிறேன்.

உங்கள் காணிக்கை பெருகவேண்டும். நீங்கள் கொடுத்த காணிக்கையை 40 மடங்கு அதிகமாக்கி உங்களுக்கு கர்த்தர் திரும்ப தருவார். கொடுத்த பணத்துக்கு இவ்வளவு பெரிய தொகையை வட்டியாக உலகில் உங்களுக்கு யாரும் கொடுக்கவே முடியாது. எந்த வங்கியும் கொடுக்கமுடியாது. ஆனால் நம் கர்த்தர் உங்களுக்கு கொடுக்க காத்திருக்கிறார்.

என்மேல் உள்ள அபிஷேகம் மிக வல்லமையுள்ளது. ஒருமுறை உங்கள் முன் நான் வந்தால் போதும் அல்லது ஒருமுறை **நீங்கள் என்னை கண்டால் போதும்** என் வல்லமை உங்களை **சுகமாக்கிவிடும்.** வெளிநாடுகளில் என்னை எப்போது வருவீர்கள் என்று கெஞ்சி அழைத்து கொண்டிருக்கிறார்கள். அங்கு சென்றால் அவர்கள் என்னை உறிந்து என்னில் உள்ள வல்லமைமையை **உறிஞ்சி** எடுத்துக்கொள்கிறார்கள். உங்களில் பலருக்கு அது புரியவில்லை.

ரூஹா சபைக்கு வந்தால் **வியாதியே வராது**

ரூஹா சபைக்கு ஒருமுறை நீங்கள் வந்துவிட்டால்

**உங்கள் கடன்கள் யாவும் நீங்கிவிடும்**

இந்த **ரூஹா சபைக்கு** ஒருவர் வந்தால் அவருக்கு **வியாதியே வராது.** இது உங்களுக்கு தெரியுமா? இந்த சபைக்கு ஒருமுறை நீங்கள் வந்துவிட்டால் உங்கள் **கடன்கள் யாவும் மாறிவிடும். கேன்சர்** வியாதி தானாக நீங்கும். என் சபை மக்களாகிய உங்களுக்கு என்னை பயன்படுத்திக்கொள்ள தெரியவில்லை. ஒவ்வொருவரும் இதை நீங்கள் உணராதுபோனால் என்னில் உள்ள மிகப்பெரிய வல்லமையை எந்த நாட்டினர் புரிந்துக்கொள்கிறார்களோ அவர்களுக்கு கொடுக்க அங்கு நான் போய்விடுவேன்.(தன் சபை மக்களை பார்த்தே இப்படி பயமுறுத்தி பேசுகிறார்).

இப்படி போகிறது ஆல்வின்தாமஸ் டிவி பிரசங்கம். ஒரு காலத்தில் ஆல்வின் தாமஸ் சகோ.சாம் ஜெபதுரை புத்தகங்களை தானே சுமந்து எங்கெங்கு கூட்டங்கள் நடக்கிறதோ அங்கு கடை விரித்து புத்தகங்களை விற்றுக்கொண்டிருந்தவர். இவர் தன் பாடல் தாலந்தால் மக்களை கவர்ந்தவர். மேலும் மக்களை ஜெபத்தில் கவரும் நுணுக்கத்தையும் படித்துக் கொண்டு ஆரம்பத்தில் 8 பேர்களை வைத்து சபையை ஆரம்பித்தவர் இவர்.

இன்று கொடிகட்டி பறக்கிறார்?. தன்னை தானே கூச்சம் இல்லாமல் அளவுக்குமேல் புகழ்ந்து உயர்த்தி **பொய் உதாரணங்களால்** மக்களை குறிப்பாக வாலிபர்பிள்ளைகளை பாடல்களினாலும் நடனங்களினாலும் விலை உயர்ந்த வாத்திய கருவிகளினாலும் கவர்ந்து அவர்களை தன்னையே சுற்றிவரும்படி செய்துவிட்டார். இந்த வேகத்துக்கும் ஒரு முடிவு உண்டால்லவா? சபை கூட்டம் இப்போது குறைய ஆரம்பித்த உடன் இவருக்கு கோபமும்,சாபமும் இவர் வாயிலிருந்து இப்போது வெளிப்படுகிறது இவரையும் அதே You Tubeல் கள்ள ஊழியர்கள் லிஸ்டில் காணலாம். திருச்சி பாஸ்டர்.**விக்டர் ஞானராஜ் அவர்களின்** பொய் சாட்சிகளும் அதே யூ டியுப்பில் கொடிகட்டி பறப்பதை காணலாம்.

## பாஸ்டர்.விக்டர்ஞானராஜ் அவர்களோடு தூதன் ஆப்பம்,தேங்காய்பால் சாப்பிட்டார்? நம்புகிறீர்களா?

தினசரி இரவு 12 மணிக்குமேல் என்னைச்சுற்றி தேவ தூதர்கள் சூழ்ந்துக்கொள்வார்கள். அவர்களிடம் பல விஷயங்களை நான் பேசுவேன். ஒருநாள் காலை உணவு சாப்பிடும்போது மிகாயேல் தூதன் என் மேஜையில் என்னோடு வந்து அமர்ந்தார். என்ன சாப்பிடுகிறீர்கள் என்றார். நான் அப்பம் தேங்காய் பால் சாப்பிடுகிறேன் என்றேன். எனக்கும் ஆப்பம் வேண்டும் என்றார். **அவருக்கும் ஒரு தட்டில் ஆப்பமும், தேங்காய்பாலும் வைத்தேன்.** இந்த காட்சிகள் என்

மனைவியின் கண்களுக்கு தெரிவதில்லை. எனக்கு மட்டுமே தூதர்கள் தென்படுவார். கொஞ்ச நேரத்தில் ஆப்பத்தில் ஒருபக்கம் பிட்கப்பட்டுள்ளதை கண்டேன். மிகாவேல் அதை தேங்காய்பாலில் தொட்டு சாப்பிட்டுயிருக்கிறார் என்று அறிந்துக்கொண்டேன். அவர் புறப்படும்போது என்னை நோக்கி அடுத்தமுறை காலை உன் வீட்டுக்கு வரும்போது எனக்கு **இட்லி,சட்டினி** வேண்டும் அதுவும் உன் வீட்டில் செய்ததாக இருக்கவேண்டும் என்று கூறி சென்றுவிட்டார். இந்த அனுபவம் என் சபை மக்களாகிய உங்களுக்கும் வரவேண்டும். இதை சொல்கிற பாஸ்டர்.விக்டர்ஞானராஜ் அவர்கள் தன் சொந்த மனைவிக்கே தூதர்களை காணமுடியவில்லை என்று அறிவிக்கும்போது சபை மக்களை மட்டும் இந்த அனுபவம் நீங்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டும் என்பது என்ன நியாயம்?. இவர் பிரசங்கம் சத்தியம் டிவியில் கேட்கலாம்.



## பல பெண்களுடன் பாவ தொடர்புகொண்ட பெந்தேகோஸ்தே பாஸ்டர்:

புதுகோட்டை பாஸ்டர்.ஆபிரகாம் சார்லஸ் டிவியில் **ஜீ** டிவியில் **சொல்வதெல்லாம் உண்மை** என்ற நிகழ்ச்சியில் நேர்முக சம்பாஷைனையில் திருமதி.**நிர்மலா பெரியசாமி**(சன் டிவியில் முன்பு செய்தி வாசித்து **வணக்கம்** என்று வித்தியாசமாக கூறி பெயர் பெற்றவர்) அவர் பாஸ்டரை நேரில் அழைத்து விசாரிக்கிறார்.

நீங்கள் பெந்தேகோஸ்தே சபையை சேர்ந்தவர் என்றால் Born Again **மனம் திரும்பினவர்கள்** என்று அழைக்கப்படுகிற சபையை சார்ந்தவர் தானே?. ஆமாம்! என்றார். அப்படியிருக்க உங்கள் **முதல் மனைவியை** தள்ளிவைத்து விட்டு சபையில் உளள் 23 வயது பெண்ணோடு குடும்பம் நடத்தி வாழ்ந்து பல வருடங்கள் கழித்து அவரையும் வீட்டைவிட்டு துரத்திவிட்டது உண்மையா,? என்று கேட்டு இரண்டாவது மனைவியையும் ஸ்டுயோவுக்கு வரவழைத்து அவருக்கு முன்பாக நேருக்குநேர் உட்கார வைத்து பேசினார். திருமதி.நிர்மலா பெரியசாமி கேட்ட கேள்வி பெந்தேகோஸ்தே சபைக்காரர்களுக்கெல்லாம் பெரும் தலைகுனிவு உண்டுவதாக இருந்தது. நீங்கள் ஒரு பெந்தேகோஸ்தே சபை பாஸ்டராக இருந்தும் **பரிசுத்தாவி** பெற்றேன் என்று கூறும் நீங்கள் முதல் மனைவியை துரத்திவிட்டதை மறைத்து இந்த பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்ய எப்படி உங்களுக்கு மனம் வந்தது. அப்படியே இரண்டாம் திருமணம் செய்த நீங்கள் இவளையும் நிராதவராக விட்டு வீட்டைவிட்டு துரத்திவிட்டீர்களே? உங்களுக்கு மனசாட்சியேயில்லையா?. இரண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டு இந்த பெண் எப்படி வாழ்வாள்?

மேலும் பாஸ்டர் பேசிய அந்த பெண்ணிடம் நயம்காட்டி பேசி மயங்கவைத்த அன்று பேசிய வார்த்தைகளை **மொபைலில் ரிகார்ட்** செய்து ஆடியோவில் டிவிக்காரர்கள் கேட்க செய்தார்கள். இது நீங்கள் பேசியது என்று ஒத்துக்கொள்கிறீர்களா? என்று கேட்க அவரும் வேறு வழியின்றி என் குரல்தான் நான் பேசியதுதான் என்று கூற, இந்த டிவி நிகழ்ச்சியை லட்சக்கணக்கானவர்கள் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நிகழ்ச்சியளர் நிர்மலா கூற பாஸ்டருக்கு உடனே முகம் வியர்த்தது. மயக்கம் வரும் நிலை ஏற்பட்டது. தன் உண்மை வெட்ட வெளிச்சமானதால் அந்த வியர்ப்பு அவருக்கு ஏற்பட்டது. உடனே குடிக்க தண்ணீர் கொடுத்தார்கள்.

நீங்கள் பைபிளை கையில் பிடிக்கவே லாயக்கற்றவர் என்று பாஸ்டரை பார்த்து திருமதி.

நிர்மலா கூறும்போது அதை பார்த்துக்கொண்டிருந்த என் உள்ளம் சுக்குநூறாக வெடித்ததுபோல ஆயிற்று. காரணம் லட்சக்கணக்கான பொதுமக்களும், கிறிஸ்தவர்களும், வாலிப பிள்ளைகளும் அந்த டிவி சேனலை பார்த்து கொண்டிருக்கிறார்களே? கிறிஸ்தவத்தைப்பற்றி புறமதத்தார்கள் என்ன நினைப்பார்கள் அதுதான் என் மனதை வேதனைப்படுத்தியது. அது எனக்கு அவமானமாகவும் இருந்தது. ஒரு கிறிஸ்தவ பாஸ்டர் அதுவும் **பெந்தேகோஸ்தே சபையின் பாஸ்டர் மேய்ப்பன்** ஸ்தானத்தில் இருந்துகொண்டு இரண்டு மனைவிகளுடன் வாழ்ந்து சபையில் ஆராதனையில் ஆவியில் நிறைகிறார்,**அந்நியபாஷையை பேசுகிறார்** என்றால் இதை வாசிக்கும் பெந்தேகோஸ்தே சபை அன்பர்கள் யோசிக்கவேண்டும். இந்த புதுகோட்டை பாஸ்டர் கையும் களவுமாக டிவியில் அகப்பட்டார்.

ஆனால் **அந்நியபாஷை** பேசிக்கொண்டே **காம லீலைகளில் விளையாடும்** பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் இன்றும் ஏராளம் உண்டு. அது யார்?யார்? என்று ஒரு பெரிய லிஸ்டே என் கையில் உண்டு. மேலே குறிப்பிட்ட இந்த பேட்டியை நீங்களே நான் குறிப்பிட்ட You tubeல் காணலாம்.

## கிறிஸ்தவ ஜோக்கர்கள்:

‘ சகோ.**செல்வராஜ்** என்பவர் ஒவ்வொரு ஊழியக்காரர்களும் **பேசும் பொய் வார்த்தைகளையும்** தீர்க்கதரிசன வார்த்தைகளையும் அவர்கள் பேசுவதை அப்படியே வீடியோ எடுத்து அதற்கு சினிமாவில் **கவுண்டமணி,விவேக்,வடிவேல்** என்பவர்கள் அந்த ஊழியர்களுக்கு பதில் கொடுப்பதைப்போல் அவர்கள் பிரசங்கத்துக்கு பேசியதை இடையிடையே பதிலாக கம்பியுட்டர் நுணுக்கத்தால் இணைத்து வெளியிட்டிருப்பது மிக அற்புதம். அவைகள் சிரிப்பும், ரசிக்கும்படியாகவும் இருந்ததோடல்லாமல் அந்தந்த ஊழியர்கள் பேசும் **பொய்களை** நக்கலாக சுட்டிக்காட்டிய விதம் மிகவும் அருமை. சாது செல்வராஜ், வின்செண்ட் செல்வகுமார், ஆகியவர்களின் தீர்க்கதரிசனம். பெங்களூர் AOGசபையின் **ஐந்துவிரல் மோதிரம்** அணியும் பாஸ்டர்.**பால்தங்கையா** அவர்களின் ஆராதனையில் அவர் ஆடும் ஆட்டம், வாலிப பெண்களை பார்த்து சிரித்துக்கொண்டே மேடையில் அவர் துள்ளுவது, இப்படி பல ஊழியர்களின் தவறுகளை தவறான உபதேசங்களை சுட்டிக்காட்டி நகைச்சுவை நடிகர்களை வைத்து அந்த வீடியோ எடுக்கப்பட்டு You Tubeல் சிறப்பாக அமைத்துள்ளார்கள். இந்த ஏற்பாடு மிகவும் புதுமையானது. இவைகளை **கிறிஸ்தவ ஜோக்கர்கள்** என்ற தலைப்பில் நீங்களும் காணலாம். சிரிக்கவும்-சிந்திக்க செய்யவும் இது ஒரு நல்ல ஏற்பாடு.



‘ நல்ல ஊழியரான சகோ.**அகஸ்டின் ஜெபகுமார்** அவர்கள் தீர்க்கதரிசிகள் என்று கூறிக்கொள்ளும் **பொய்யான ஊழியர்களுடன் அவருக்குள்ள தொடர்பு** Augustine Jebakumar(GEMS) **Joins False Prophets** List என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர். ஆனால் நான் அந்த வீடியோவை பார்க்கவில்லை.

இதை வாசிக்கும் நீங்கள் நான் குறிப்பிட்ட அந்த You Tube நிகழ்ச்சிகளில் இவைகளையும் காணலாம். இன்னும் பல கள்ள ஊழியர்களையும் அவர்களின் தவறுகளையும் அவர்கள் காண்பிக்கிறார்கள். அதிலேயே பல தலைப்புகளின் விவரமும் வெளியிட்டுள்ளார்கள்.

இந்த குறிப்பிட்ட கள்ள ஊழியர்களின் You Tube காட்சிகளை டவுன்லேட் செய்து அவைகளை ஒரு DVDயில் காப்பி செய்து கிறிஸ்தவர்கள் யாவருக்கும் இலவசமாக துண்டு பிரதியை விநியோகம் செய்வதைப்போல் வெளியிட்டால் இப்படிப்பட்ட ஊழியர்களிடமிருந்து கிறிஸ்தவ உலகம் காப்பாற்றப்படும் என்று நம்பலாம். இந்த நல்ல ஏற்பாடுகளுக்காக இதற்கு முயற்சி எடுக்கிறவர்களுக்காக நாம் ஜெபிப்போம்.

## அந்நியபாஷை ஆராய்ச்சி:

1988ம் ஆண்டு **Deliverance Ministry** என்ற பெயரில் Dr.George Birch என்பவர் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார்.

அதில் அந்நியபாஷை பேசி உண்மையான சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்பவர்களையும், சாட்சி கெட்ட வாழ்க்கை வாழும் அந்நியபாஷை பேசும் கிறிஸ்தவர்களின் அந்நியபாஷைகளைக் குறித்தும் ஆராய்ச்சி செய்து ஒவ்வொருவரும் பேசும் அந்நியபாஷைகளை பதிவுசெய்து **அந்நியபாஷை** பேசிய அவர்களை பேட்டி கண்டு ஆராய்ச்சி முடிவை புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் ஆராய்ச்சிக்கு தெரிந்தெடுத்த 207 நபர்களில் 204பேர் பேசிய அந்நியபாஷை போலியானது என்று மட்டுமல்ல, அனைத்து **அந்நியபாஷை** பேசுபவர்களுக்கு பின்னால் பிசாசு நிற்பதையும் அது இவர்களை அந்நியபாஷை பேசவைப்பதையும் அறிந்துக்கொண்டராம். எத்தனை பயங்கரம் வாசகர்கள் இனியாவது அந்நியபாஷை பேசும் இப்படிப்பட்ட ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.

## கள்ள ஊழியர்.பாஸ்டர்.ஆபிரகாம் சார்லஸ்- ஜாக்கிறதை:

### பல இடங்களில் துரத்தப்பட்ட ஊழியர் சென்னை கிறிஸ்தவ சபை விசுவாசிகளை குழப்பவருகிறார்: எச்சரிக்கை:

### ஒரு வாசகரின் கடிதம்:

அன்புள்ள அண்ணன்,

என் பெயர் அற்புதராஜ். நான் **சென்னை கொருக்கு பேட்டையில்** வசிக்கின்றேன். நான் RC யில் இருந்து இரட்சிக்கப்பட்டவன். நான் பகுதி நேர ஊழியமும் செய்கின்றேன்.

எங்கள் கொருக்குபேட்டையில் உள்ள ஒரு பள்ளி வளாகத்தில் தீர்க்கதரிசி **பாஸ்டர்.ஆபிரகாம் சார்லஸ்** என்பவர் 2013ல் வந்து இருந்தார். அப்போது அவர் ஒரு பிரசங்கம் பண்ணினார். என்னவென்றால் வேதத்தில் சகரியா 10:8ல் **பயில்** என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் **விசில்** (Whistle) என்ற வார்த்தை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே விசுவாசிகளை கூட்டத்தில் விசில் அடிக்குமாறு கேட்டுக் கொண்டார். விசுவாசிகளும் விசில் அடித்தனர். நான் அதை கண்டு கலங்கிவிட்டேன்.



**ஜாமக்காரன்:** (மேய்ப்பன் தன் கையில் வைத்துள்ள மூங்கில் குழல் மூலம் ஊதுவான். அந்த சத்தத்தை கேட்டு ஆடுகள் எங்கு சிதறியிருந்தாலும் மேய்ப்பனிடம் ஓடிவரும். விசிலைப்பற்றி **வேதாகம சரித்திரம்** கூறுவதும் இதைத்தான். ஆனால் இப்படிப்பட்ட கள்ள ஊழியர்கள் சபை ஆராதனையில் பாட்டு முடிந்த

உடன் ஓ வென்று கத்துவதும் **ஊளையிடுவதும்,விசில்** அடிப்பதும் இப்போதும் அமெரிக்கா ஆராதனைகளில் காணலாம். இவர்களெல்லாம் விபச்சார விடுதிகளில் ஆடல் ஆடி பாடும்போது செய்யும் செயல்களை அப்படியே கிறிஸ்தவ பாடல்களுக்கும் கொண்டு வந்துவிட்டார்கள். நம் தமிழ்பாடல்களிலும் பலர் பாடல்முடிவில் விசில்சத்தத்துடனும்,கரகோஷத்துடனும் CD இறக்கியுள்ளனர். எச்சரிக்கை!. அப்படிப்பட்ட ஆராதனைகளில் விசுவாசிகள் பங்கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் **பிசாசு(லூசிபரின்)** குழுவினர் ஆகும். இப்படிப்பட்ட பிசாசின் ஆட்களில் ஒருவர்தான் பாஸ்டர்.ஆபிரகாம் சார்லஸ்).

' கடிதத்தில் தொடர்ந்து அற்புதராஜ் அவர்கள் எழுதியதாவது: பின்பு பாஸ்டர் அவர் தன் கைகுட்டையை எடுத்து தன் முகத்தை துடைத்து நோயாளிகளின்மீது தூக்கி எறிந்து உங்கள்மீது ஆண்டவரின் வல்லமையான பரிசுத்தஆவி இப்போது இறங்கி வருகின்றது என்றார். இப்போது கைகுட்டையை தொட்டவர்களுக்கெல்லாம் அபிஷேகமும்,சுகமும் கிடைக்கும் என்றார். பின்பு பாஸ்டர் நோய் சுகமானவர்களை மேடைக்கு அழைத்தார்.நோயாளிகள் மேடையில் ஏறினார் கள். நானும் மேடையில் ஏறினேன். என்னிடம் அவர் பொறுமையாகவந்து என் தலையின் மீது கைவைப்பது போல் என் நெற்றியில் பளார் என்று அடித்தார். நான் கீழே விழஇருந்தேன் சுதாரித்து விழாமல்நின்றுவிட்டேன். என்னைப்போல அனைவரையும் தள்ளினார் அவர்கள் விழுந்தார்கள்.

**பொய் சாட்சிகள்:** பிறகு ஒரு தாய்யும் 4 வயது குழந்தையும் மேடையில் இருந்தார்கள். குழந்தைக்கு காது இரண்டும் கேட்காது. அந்த பாஸ்டர் எண்ணையை காதுகளில் தடவினார். 15 நிமிடம் கழித்து குழந்தையை தூக்கினார். காதுகளில் விரலால் சிட்டிக்கு தட்டினார். குழந்தை திரும்பி பார்த்தது ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள், கர்த்தர் குழந்தையின் **காதை திறந்துவிட்டார்** என்றார். அந்த தாயும் சாட்சி சொன்னார். நான் 2 நாள் கழித்து அந்த தாயின் சகோதரனிடம் குழந்தை எப்படி இருக்கிறது? என்று கேட்டேன். **காது** இன்னும் கேட்கவில்லை. அப்படியேதான் இருக்கின்றது! என்றான். நான் அதிர்ந்துவிட்டேன். இப்படிப்பட்ட பொய் சாட்சிகள் அநேகம் அந்த மேடையில் காணப்பட்டது.

**ஜாமக்காரன் :** இதே மாதிரி அற்புத சாட்சிகளைத்தான் சகோ.**மோகன் சி.லாசரஸ்,சகோ. பால்தினகரன்** இன்னும் பல அற்புத ஊழியர்களின் கூட்டத்தில் காண்கிறீர்கள். வாசிக்கிற நீங்கள் சிரமப்படாமல் இவர்கள் கூட்டங்களில் யார் சுகம் பெற்றேன் என்று சாட்சி சொன்னார்களோ அவர்களை ஒருவாரம் கழித்து நேரில் நீங்கள் சென்று விசாரித்து பாருங்கள். அப்போதுதான் அவர்கள் கூறியது பொய்சாட்சி என்று விளங்கும். இந்த கடிதம் எழுதிய சகோ.**அற்புதராஜ்** எழுதியது உண்மை என்று வாசிக்கிற உங்களுக்கும் விளங்கும். பல வருடங்களுக்குமுன் மேலே குறிப்பிட்ட மேலே குறிப்பிட்ட பிரபல ஊழியர்கள் கூட்டத்தில் சுகம் பெற்றவர்கள் இவர்கள் **சுகம் ஆவிட்டார்கள்** என்று மேடையில் இவர்கள் குறிப்பிட்டவர்களை நேரில் கண்டு அவர்கள் யாரும் சுகம்ஆகாது இருப்பதை அறிந்து அவர்கள் புகைப்படத்தை ஜாமக்காரனில் வெளியிட்டு அவைகள் பொய் சாட்சி என்று நிரூபித்து எழுதினேன். இப்படிப்பட்ட கள்ள ஊழியர்களை நீங்கள் இன்னும் நம்புவீர்களே யானால் அது உங்கள் சுதந்திரம் ஆகும்).
மீண்டும் 2014ம் வருடம் இதே ஆபிரகாம் சார்லஸ் வந்தார். **ஆப்பிளை**(Apple)தன் வாயில் கடித்து கூட்டத்தில் தூக்கி எறிந்தார். இதை பொறுக்கி சாப்பிட்டால் **உங்கள் நோய் தீரும்** என்றார். விசுவாசிகளும் அவர் கடித்த அந்த எச்சில் பழத்தை போட்டியிட்டு எடுத்து சாப்பிட்டார்கள். பிறகு வாழைப்பழத்தை தூக்கி எறிந்தார்.. அந்த **பழத்தை பிடிப்போருக்கு அபிஷேகம் வரும்** என்றார். இவர் எப்போதும் வேதபுத்தகத்தை பார்க்கமாட்டார்.

இப்போது 2015 ஆகஸ்ட்ல் மறுபடியும் 14,15,16 தேதிகளில் சென்னை வருகிறார். இப்படிபட்ட கள்ள ஊழியர்கள் கிறிஸ்தவர்களை குழப்புவதை காணும் எங்களால் இதை தாங்க முடியவில்லை. ஆகவேதான் உங்களிடம் இதை நான் பகிர்ந்துகொண்டேன். என்னோடுள்ள பலரும் உனக்கு என்ன?உன் வேலையை பார்? என்றார்கள். எனக்குள் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் ஒடுகிறது. என்னால் இப்படிப்பட்ட கள்ளஊழியங்களை தங்கமுடியவில்லை. எங்கள் ஏரியாவில் இருக்கும் ஆத்துமாக்காக நான்தானே உத்திரவாதி. நாம் நம் சபை ஆடுகளை நாம் தானே காக்கவேண்டும் என்ற எண்ணத்தை ஆவியானவர் எனக்குள் உணர்த்திக்கொண்டே இருந்தார். அவர்கள் அந்த கள்ள ஊழியர் இம்முறையும் வருவதை பேனர் அடித்து விளம்பரம் படுத்தினார்கள். நானும் அவரின் பொய் செயல்களை எதிர்த்து பேனர் கட்டினேன்? அவர்கள் அதை கிழித்துவிட்டார்கள். பிறகு பேஸ்புக்கில் இந்த படத்தை அப்படியே அப்போலடு செய்தேன். அதிலிருந்து என்னை துாங்கவிடாதபடி செய்ய போன்னில் கொலைமிரட்டல் வந்து கொண்டிருக்கிறது. இப்போது எனக்கு போன் எடுக்கவே பயமாக இருக்கிறது. என் இயேசுவுக்கு என்னைத்தவிர வேறு யாரு இருக்கின்றார்கள். அண்ணா!,எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். அண்ணா,எங்கள் தண்டயார்பேட்டை அல்லது கொருக்குபேட்டையில் ஜாமக்காரன் வாசகர்கள் அல்லது உங்களுக்கு தெரிந்த நண்பர்கள் இங்கு இருந்தாலும் எனக்கு தோள் கொடுக்க சொல்லுங்கள்!. இந்த பிரச்சனையில் இருந்து நான் விடுபட உதவுங்கள். நன்றி

**(குறிப்பு:** இந்த கடிதத்தை தாமதித்து வெளியிடுவதால் வருதப்படுகிறேன். இதை எழுதியவரின் முழுவிலாசம் எழுதினால் அவருக்கு அது ஆபத்தை உண்டாக்கும்). ஜெபியுங்கள்..

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:

**USA:** 2015 **OCT** 6 to 9 - **NEW YORK,IOWA,**
11,12 - **CHICAGO- Rev.Godwin - 163 09631297**

**CANADA**: 2015 **OCT** 12 to 18 - **TORANTO** - CANADA - Pastor.Manoharan -905-8370051
- Mr. DOMINIC - 416-8757892

**ABU DHABI: OCT** 19 to 1 NOV -CSI **ABU DHABI** CSI MALAYALA CONGREGATION
- Rev.Paul - 00971504120123

**ENGLAND : NOV** -2 to 3 - **LONDON** -Bishop.REGINOLD - 44 208 3660583,07956478093

**LONDON :** NOV -- 4th - Mr.Doni - 44(o) 2082525586

**IRELAND :** NOV -- 5th - Mr.JOHN WESLY - 353-894151538

**DUBAI :**

2015 **NOV** 23 to 29 - **DUBAI** TAMIL CSI CONGREGATION-Vice President - 971552728146,
- Mr.Singaratnam-971504440679

**குறிப்பு:** நான் வெளிநாடுகளில் சுவிசேஷம் அறிவிக்க செல்லவில்லை. சுவிசேஷம் அறிந்த கிறிஸ்தவர்கள் குறிப்பாக வெளிநாட்டில்வாழும் என் வாசகர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்படியிருக்கிறார்கள் என்பதை அறியவும்,அவர்கள் ஆவிக்குரிய சந்தேகங்களுக்கு பதில் அளிக்கவும், வருகைக்கும்,மரணத்துக்கும் ஆயத்தப்படுத்தவுமே வெளிநாடு ஊழியத்துக்கு போகிறேன். **ஊழியத்துக்கு பணம்சேர்க்கும் நோகத்திலும் நான் போகவில்லை.** அதன் தேவையும் எனக்கில்லை. எனக்கு ஸ்தாபனம் கிடையாது. என் இரண்டு பிள்ளைகளும் நல்ல ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் வசதியோடு இருக்கிறார்கள். ஜாமக்காரன் பத்திரிக்கைக்கு ஆகும் செலவுகளை வாசகர்களாகிய நீங்களே குறைவில்லாமல் கொடுத்து உதவும்போது எனக்கு வெளிநாட்டு பணசேகரிப்பு அவசியமில்லை. பயண செலவு,டிக்கட் செலவு யாவும் என்னை அழைப்பவர்களே கொடுத்துவிடுகிறார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

**"அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது". லூாக் 24:47.**

# சால்வேஷன் TV விமர்சனம்:

**Salvation TV** - ஒரு சகோதரி எனக்க எழுதிய கடிதத்தில் 2015 ஜீலை ஜாமக்காரனில் பக்கம் 26,27ல் குடும்ப ஆலோசனை என்ற நல்ல நிகழ்ச்சியை குறித்து நான் எழுதிய விமர்சனத்தை பாராட்டியும், அதேசமயம் நான் என் விமர்சனத்தில் கடைசியாக அந்த சகோதரி விமர்சித்தது அந்த டிவியில் வந்த நிகழ்ச்சி அது குடும்ப ஆலோசனை நிகழ்ச்சியாகும். அதில் குறிப்பிட்ட ஒரு சகோதரி நிகழ்ச்சியை நடத்தும் சகோ.ஜோயலிடம் கூறுகிறார். நானும் என் கணவரும் இணைந்து ஜெபிக்கும்போது அவர் புரியாத **அந்நியபாஷையில்** பேசுகிறார் இப்படி எங்கள் ஜெபம் வித்தியாசப்படுகிறது? தூரத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஊழியக்காரர்களிடம் பிரச்சனைக்களை கூறி ஜெபிக்க அவர்களிடம் போகலாமா? என்று கேட்கிறார். அதற்கு அந்த டிவி நிகழ்ச்சியை நடத்தும் குடும்ப ஆலோசகர் கூறுகிறார். போகலாம் தவறில்லை. ஆனால் அந்த ஊழியரே டிவியில் தோன்றி ஜெபிக்கிறாரே அவரோடு நீங்களும் இணைந்து ஜெபிக்கலாமே என்று சிபாரிசு செய்கிறார்.

கேள்வி கேட்ட அந்த சகோதரி எந்த ஊழியரை சென்று பார்க்கலாமா என்று கேட்கிறார் என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. சகோ.ஜோயல் என்பவர் பதில் கூறும்போது அந்த குறிப்பிட்ட ஊழியர் டிவியில் ஜெபிக்கும்போது அந்த ஜெபத்தில் நீங்களும் இணையலாமே என்று ஆலோசனை கூறுகிறார்.

இதை வைத்துதான் இவர்கள் குறிப்பிடும் நான் யூகிக்கும் அந்த ஊழியர் முதலாவது பொய்யான **அந்நியபாஷை பேசுபவர், பொய்யாய் ஜெபத்தில் பெயர் அழைப்பவர்** இவரோடு இணைந்து ஜெபிக்க ஆலோசனை கொடுக்கும் **ஜோயல் தம்பதியினரும்** இந்த குறிப்பிட்ட பொய் தீர்க்கதரிசன ஊழியரின் விசிறிகள் என்று தெளிவாக தெரிகிறது. அவர் குறிப்பிடும் ஊழியரோடு டிவியில் அந்த ஊழியர் ஜெபிக்கும்போது அவரோடு இணைந்து ஜெபித்தால் அவர் கூறும் ஊழியரோடு இணைந்து ஜெபிக்கும் அந்த ஜெபம் கேட்கப்படுமா? அவரோடு ஜெபத்தில் ஆவிக்குரியவர்களை இணைந்து ஜெபிக்கும்படி இவர்கள் தவறான ஆலோசனை கூறலாமா? இப்படி நான் எழுதியதற்கு சில நல்ல உள்ளங்கள் கொஞ்சம் பாதிப்பு அடைந்தன.

## Blessing CMC ஜெபமும் - என் விமர்சனமும்:

இந்த அடிப்படையில் தான் வெல்லூர் BLESS CMC ஜெபத்தை நடத்தும் சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்களோடு சகோ.ஸ்டான்லி ஜெபத்தில் இணைந்தது சரியல்ல என்றேன். அந்த ஜெபம் கேட்கப்படுமா?

ஆள்கூட்டம் சேர்க்க சினிமா **நடிகர்.குமரிமுத்து**, கிறிஸ்தவளாக மாறிய ஆபாச நடிகை.**நக்மா** இப்படிப்பட்டவர்களை கன்வென்ஷனுக்கு அழைப்பவர்களும் சபையினரும் ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்படிப்பட்டவர்கள் என்பது விளங்குகிறது அல்லவா?.

**நடிகர்.குமரிமுத்து** சொல்கிறாா: நடிப்பு என் **தொழில்**- அதை ஊழியத்தோடு இணைக்காதீர்கள். **அது தொழில்- இது ஊழியம்** என்கிறார். அன்று கையும்,களவுமாக பிடிக்கப்பட்ட வேசி-விபச்சாரியை இயேசுவிடம் அழைத்துவந்தபோது இயேசு கூறிய பதில் என்ன? **இனி நீ பாவம் செய்யாதே**? அதன் அர்த்தம் **விபச்சார தொழிலுக்கு இனி போகாதே** என்பதாகும்.

தொழில் வேறு- ஊழியம் வேறு என்பவர்கள் இதை புரிந்துக்கொண்டால் ஊழியத்தை மட்டும் தெரிந்துகொண்ட உண்மையான கிறிஸ்தவ ஊழியனாக இருக்கமுடியும். மற்றவர்களை வேதத்தை படித்தவர்கள் என்றுமட்டும் கூறலாம். முன்னாள் ஜனாதிபதி டாக்டர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் காந்தி நூற்றாண்டு விழா நினைவுகூறும் கூட்டம் டெல்லி கிறிஸ்தவ தேவலாய வளாகத்தில் நடைபெற்றது. சுமார் 20 நிமிடம் ஏராளமான வசனங்களை மேற்கோள் காட்டி கிறிஸ்தவ பிரசங்கமும் நிகழ்த்தினார். வேதத்தை நன்கு படித்தால் வசனங்களை பாராமலே வேதவசன மேற்கோள் காட்டலாம், நல்ல பிரசங்கம் நிகழ்த்தலாம். ஆனால் அவர்கள் பொய் பேச முடிகிறதே!. பொய்யான அந்நியபாஷை பேசமுடிகிறதே,? இவர்கள் எப்படி உண்மையான ஊழியர்களாக இருக்கமுடியும். இவர்களால் கூட்டத்தை கூட்டதான் முடியும்.

வெல்லூரில் அதுதான் நடந்தது. சகோ.ஸ்டான்லியை பார்க்கவோ அல்லது உண்மையாய் CMC Hosepitalக்காக ஜெபிக்கல்லவா ஆசைப்படும் மக்கள் அங்கு காணப்படமாட்டார்கள்.

நாலுமாவடி **மோகன் சி.லாசரஸ்** அவர்களை காணவும் இந்த கூட்டத்திலாவது சகோதரன் மோகன் சி.லாசரஸ் என் பெயரை கூப்பிடமாட்டாரா?, சுகம் கிடைக்காதா? என்று ஏங்கும் ஜனங்களின் எண்ணிக்கைத்தான் அந்த கூட்டத்தில் நீங்கள் பார்த்தீர்கள். உண்மையாக ஜெபிப்பவர்கள் இப்படிப்பட்ட கூட்டத்துக்கே வரமாட்டார்கள். காரணம் இரட்சிக்கப்படாதவர் கூட்டமும் அற்புதத்தை எதிர்ப்பார்க்கும் கூட்டமும் மட்டுமே அங்கு காணப்படும். இப்படிப்பட்டவர்களோடு ஜெபத்தில் எப்படி ஐக்கியபடமுடியும்?.

Bless CMC நடத்தும் குழுவினர் உண்மையாக CMS ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்று நினைத்திருந்தால் அந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களும் இரட்சிப்பின் அனுபவத்தை அனுபவித்திருந்தால் BLESS CMC விளம்பரங்களை எந்தெந்த பத்திரிக்கைகளில் வெளியிட்டார்களோ அவைகளில் நோட்டீஸ், வால்போஸ்ட் வெளியிடும்போது அவைகளில் **மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம்** உள்ளவர்கள் மட்டும் இந்த **ஜெப ஐக்கியத்தில் பங்கு** பெறவேண்டும் என்றல்லவா குறிப்பிட்டிருக்கவேண்டும்!.

சகோ.ஸ்டான்லியின் Blessing பத்திரிக்கையில்கூட அந்த முக்கிய தகுதியைப்பற்றி குறிப்பிடவில்லையே!. சகோ.ஸ்டான்லி அவர்களுக்கு இந்த தகுதியைப்பற்றி தெரியாதா? தன் பிரசங்கத்தில் **எப்படி ஜெபிக்கக்கூடாது?** என்ற தலைப்பில் ஜெப தகுதியைப்பற்றி சரியாக எழுதினாரே!. இந்த கூட்டத்துக்கு மட்டும் அவர் பட்டும்படாமல் ஒதுங்கநினைக்கும் நபர்போல விளம்பரம் கொடுத்ததேன்.

இவர்களுக்கு **பெரும்கூட்டம்தான் முக்கியம்.** அதற்கு செலவழிக்கும் பணம் கிட்டதட்ட ஒரு **கோடியாகும்.** சில மணிநேர கூத்துக்கு **லைட் அலங்காரம், பந்தல், விளம்பர செலவு** அத்தனையும் இந்த கணக்கில் சேருகிறது.

ஆவிக்குரிய ஊழியர்களும்-ஜெபத்தில் பொய் சொல்லும் ஊழியர்களும் இணைந்து நடத்தும் இந்த BLESS CMC ஜெபகூட்டம் கூட்டத்தை நடத்துபவர்களின் பெருமைக்கு வழிவகுக்கும் கூட்டமாகிவிடும்.

உண்மையாக மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்கள் அவரவர் வீட்டிலும், தனியாகவும், குழுவாகவும், CMC ஆஸ்த்திரிக்குள்ளே CMC Hospitalக்காக தினசரி ஜெபிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும்? அதில் நானும் ஒருவன். 1965ம் வருடத்திலிருந்து Sis. Alice,Sis.Victoria இவர்கள் நர்சிங் சூப்பிரண்டன்டாக இருந்தபோது மாதம் ஒருமுறை CMC ஆடிட்டோரியத்தில் மாதாமாதம் வேத பாடமும், ஜெபகூட்டமும் நடத்தியவன் நான். அந்த சமயத்தில் சகோ.ஸ்டான்லி

CMC இஞ்சினியராகவும், Dr.லில்லியன் அவர்கள் தன் மருத்துவ படிப்பை படித்துக் கொண்டிருப்பவருமாக இருந்தார்கள்.

நான் ஆடிட்டோரியத்தில் பேசும்போது இவர்கள் விசேஷ உத்தரவு பெற்று என்னுடைய செய்தியை கேட்க கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள்.

அதன்பிறகுதான் சகோ.ஸ்டான்லி,டாக்டர்.லில்லியன் அவர்களை திருமணம் செய்தார். அதன்பின்தான் சகோ.ஸ்டான்லி ஊழியம் செழிக்க உயர ஆரம்பித்தது.

**சகோ.லில்லியன் ஸ்டான்லிக்கு** ஞானஸ்நான ஆலோசனை கூற அவர் தங்கிய குடியிருப்புக்கு நான் அனுப்பப்பட்டேன்.

இந்த விஷயம் எழுதும்போது அந்த கால பழைய நினைவுகள் இப்போது யாவும் என் நினைவில் வந்துபோனது. அதனால் இவைகளை குறிப்பிட்டேன். அவ்வளவே!.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

**www.jamakaran.com**

# இதுவா பரிசுத்தஆவியானவரின் செயல்?

## பரிசுத்த ஆவியானவர் பெயரில் பிசாசின் ஆவியின் கிரியை



**விழுந்து கிடக்கும் பெண்கள்**



**கைவிரல் நீட்டினால் கீழே விழலாம்.**

மேலே பார்க்கும் படத்தில் காணும் பெண்களின் படம் பூமி அதிர்ச்சியிலோ,ரயில் விபத்திலோ, செத்துப்போனவர்களை தரையில் கிடத்திய காட்சி அல்ல. அது ஆவியானவரின் வல்லமையால் விழுந்தவர்களாம். விழுந்தவர்கள் உடனே எழுந்திருக்கக்கூடாது. புகைப்படம் எடுக்கும்வரை ஆடாமல் அசையாமல் படுத்து ஒரு சிறு தூக்கமும் போடலாம்.

என்ன கூத்து இது?. ஊழியக்காரர்களிடம் அற்புத வல்லமை உண்டு என்பதை மக்களுக்கு காண்பிக்க ஊழியர்கள் செய்யும் தந்திரம் என்று எப்போது பிஷப்மாரும்,சபை மக்களும் உணருகிறார்களோ தெரியவில்லை. அதுவரை எந்த ஊருக்கும், சபைக்கும் உயிர்மீட்சி உண்டாகாது.

இதுவரை சகோ.ஜட்சன் அவர்கள்தான் ஜெபிக்க வந்த மக்களை கீழே விழவைத்தார். மனைவி வேடிக்கைப்பார்த்து விழ வைக்கும் நுணுக்கத்தை கண்டுபிடித்து இரண்டு பேர்களைத் தயார்ப்படுத்தி விழுந்தவுடன் அதை பார்த்து, தமிழ்நாட்டில் அம்மாவை திருப்திப்படுத்த பலர் விழ ஆரம்பித்துவிட்டனர். பரிசுத்த ஆவியானவர் இப்படி விழ வைக்கமாட்டார். ஆகவே விழுந்தவர்கள் அனைவரும் அசுத்த ஆவி பிடித்தவர்களாக இருக்கவேண்டும். விழ வைத்த ஊழியர்களுக்கும் அசுத்த ஆவி உதவி செய்கிறது.

வேதத்தில் கூறுவது என்ன? பரிசுத்தாவி உங்கள்மேல் வரும்போது **பெலப்பட்டு, புறப்பட்டு, சாட்சியிருப்பீர்கள்** என்பதாகும். இந்த மூன்று காரியங்கள்தான் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு அடையாளம் ஆகும். நீங்கள் பெலப்பட்டால்-கீழே விழுவீர்களா? எழுந்து நிற்பீர்களா? பெலப்படும்போது கீழே விழுந்தவர்கள்கூட எழுந்து நின்றாகவேண்டுமே!.

நம் கிறிஸ்தவ மக்களும், புற மதத்தவர்களும் இப்படிப்பட்ட ஊழியர்களால் என்னமாய் ஏமாற்றப்படுகிறார்கள். இவைகளைவிட இன்னும் அதிகமான கூத்துக்கள் சகோ.ஜட்சன் ஆபிரகாம் அவர்கள் கூட்டத்தில் நடப்பதை You Tubeல் காட்டியுள்ளார்கள்.

இனி அடுத்தது, இவர்களின் மகனை தயார் படுத்துகிறார்கள். சீக்கிரமே மகன் கை நீட்ட மக்கள் கீழே விழுவதை நீங்கள் காணப்போகிறீர்கள். ஆகஸ்ட் மாதம் மகனை அறிமுகப்படுத்திவிட்டார்கள்.

கிறிஸ்தவர்கள்,பிஷப்மார்கள் இனியாவது இப்படிப்பட்ட பொய்யான வேத வசனத்துக்கு விரோமான ஊழியர்களைக்குறித்து விழிப்புணர்வு பெற்றுக்கொள்வார்களா?

# YMCA & YWCA என்றால் என்ன?

## விக்கிபீடியா செய்தி கூறுவதென்ன?

இந்த இயக்கம் நகரங்களில் வேலை செய்யும் கிராம புற பெண்கள் மற்றும் ஆண்களுக்கு குறைந்த செலவில் தங்க வழி செய்யும் நல்ல சமூக சேவை நிறுவனம் ஆகும். YMCA என்ற ஸ்தாபனம் ஒரு காலத்தில் சுவிசேஷ பிரதி விநியோகம் செய்தல்,தெரு பிரசங்கங்கள் செய்வது ஆகிய கிறிஸ்தவ ஊழியங்களை நிறைவேற்றியது. அது வாலிப மாணவர்கள்,விபச்சாரம்,உலக இச்சை,ஆல்கஹால், சூதாட்டம் இவற்றில் மாணவர்கள் விழுந்துவிடாமலும் அவர்களைத்தேடி போய்விடாமல் அவர்களை நல்ல குடிமகன்களாக்குவதே YMCA & YWCA ஸ்தாபனத்தின் நோக்கமாக இருந்தது.

### YMCA & YWCA வில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் உணரவேண்டியது:

1. இயேசுகிறிஸ்துவைப்பற்றி சுவிசேஷத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் பறை சாற்றுவது.
2. அதிக பொறுப்புள்ள மனிதர்களாக **ஆண்களும்,பெண்களும்** அப்படிப்பட்ட நல்ல செயல்களுக்கு தலைமை ஏற்று செயல்பட்டு சமதர்ம சமுதாயம் அமைய பாடுபடுதல்,
3. **பெண் உரிமை, குழந்தை உரிமை** ஆகியவற்றிற்காக பாடுபடுதல்.
4. கலாச்சார மேம்பாடு அடைய கலாச்சார கூட்டங்கள்,புரிந்துணர்வு கூட்டங்கள் நடத்துவது.
5. **சமுதாய் மேம்பாடு,இனபாகுபாடு ஒடுக்கப்பட்டோர் நலம்,ஏழைகள் மேம்பாடு, சிறுபான்மை மக்களை பாதுகாத்தல், அவர்களுக்காக குரல் கொடுப்பது.**

6. தேவனுடைய படைப்பபை பாதுகாத்தல், இயற்கையை இயற்கை வளங்களை பாதுகாத்தல். இப்படிப்பட்ட சமுதாய நற்பணி செய்யும் நோக்கத்தோடு தொடங்கப்பட்டதாகும். டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய நானும் சேலம் YMCAல் ஆயுல் அங்கத்தினானகும். ஆனால் என் ஊழியத்தின் நிமித்தம் YMCA நடத்தும் நிர்வாக கூட்டங்களில் எதிலும் பங்குகொள்ள இயலாதவனானேன். ஆனால் YMCA & YWCA நடத்தும் ஆவிக்குரிய கூட்டங்களில் இந்தியாவின் பல மாநிலங்களில் அழைக்கப்பட்டு பிரசங்கம் செய்துள்ளேன். இதில் நிர்வாக பொருப்புகளில் தலைவரைத்தவிர மற்ற பொருப்புகளுக்கு அந்தந்த பெரு நகரங்களில் உள்ள பல்வேறு மதத்தில் உள்ளவர்களை நியமிப்பார்கள். நாளடைவில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத பலர் YMCA & YWCA நிர்வாகங்களில் புகுந்துவிட்டனர். அதனால் ஒரு கட்டத்தில் YMCA என்ற எழுத்தில் Christian என்ற பெயர் நீக்கப்பட்டு அனைத்து மதத்தினருக்கும் பொதுவான ஸ்தாபனமாக மாற்ற முயற்சிசெய்தனர். நல்லவேளை அந்த முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன. இப்படிப்பட்ட தவறான ஆட்களை உள்ளே நுழைந்து முக்கிய ஸ்தானம் பிடிக்க காரணம், இதன் தலைவர்(President) ஸ்தானத்தில் உள்ளவரும்,செயலரும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இல்லாமல்போனதுதான் காரணமாகும்.

' சுமார் 30 வருடங்களுக்குமுன் **திருப்பூர்** YMCA பொருப்பில் நடத்திய ஆவிக்குரிய கூட்டத்தில் மூன்று நாட்கள் பிரசங்கித்தேன். பல இந்து மதத்தினர் கிறிஸ்துவை அறிந்துக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் அக்கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்தது. ஆனால் நிகழ்ச்சி நிரலில் என் கூட்டம் முடிந்த மறுநாளே ஒரு சினிமா **நடன நடிகையை** அழைத்து நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நான் 3 நாள் செய்த பிரசங்கம் மக்களின் மனதில் நிற்காமல் அந்த நடன நடிகையின் நினைவாக மக்கள் சென்றனர். இப்படிப்பட்ட ஏற்பாடுகளை கண்டித்து என் பத்திரிக்கையில் அன்றே எழுதினேன்.

' **திருச்சி** YMCAயில் பலமுறை YMCA மைதானத்தில் பிரசங்கம் செய்தேன் Cochi YMCAவில் வருடாவருடம் YMCA சார்பில் பெரிய மைதானத்தில் என்னை அழைத்து பல பெரிய கூட்டங்களை நடத்தினார்கள்.

' **பூனாவிலும்,கேரளாவிலும்** வேறு சில இடங்களிலும் இப்படி ஆவிக்குரிய கூட்டங்களை YMCA சார்பிலும் YWCA சார்பிலும் நான் அழைக்கப்பட்டு நடத்திய கூட்டங்களில் இயேசுகிறிஸ்துவை பொதுமக்களும் அறிய நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டது.

ஆனால் நாளாக நாளாக இப்போது YMCA கட்டிடத்துக்குள் **சூதாட்டங்கள்** நடைபெற தொடங்கின.

இப்போதும் சில இடங்களில் நடக்கும் சில மோசமான பிரச்சனைகளை கேள்விப்பட்டு YMCA & YWCA ஆரம்பித்தவர்களின் நோக்கம் இருட்டடிப்பு செய்யப்பட்டு கிறிஸ்து தானாக நீக்கிப்படுகிற செயல் வேதனையை அளிக்கிறது.

YMCA & YWCA மூலம் நன்மை அடைந்த புறஜாதி மதத்தினர்கள்,ஏழை மாணவர்கள் ஏராளம். அவைகள் கிறிஸ்துவின் நாமத்தில் இன்னும் அதிகமாக மேன்மைடைய ஜெபிப்போம். இந்த ஸ்தாபனத்தின் செயலர்கள்,தலைவர்களுக்காக ஜெபிப்போம். YMCA & YWCAவிலிருந்து கிறிஸ்துவின் நாமம் எடுபட்டு போகாதபடி கர்த்தர் கிருபை செய்வராக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வாசகர்கள் கவனிக்கவும்

**1. குறைவான** Stamp **ஒட்டி அனுப்பும் பத்திரிக்கைகளை, கடிதங்களை, கவர்களை ஒரு சிலவற்றை மட்டும் திருப்பி அனுப்புகிறோம். காரணம் அனுப்புபவர்கள் அந்த தவறை சரிசெய்து கொண்டு கடிதத்தின் சரியான எடைக்கு ஏற்ப ஸ்டாம்ப் ஒட்டி அனுப்ப அது அவர்களுக்கு உதவும். இப்படி எழுதுவது உங்களை வேதனைப்படுத்தினால் பொருத்துக்கொள்ளவும். கவர் அனுப்புபவர்கள்** Stamp **ஒட்டி அனுப்பும்போது சரியான எடை பார்த்து, அதற்குறிய** Stamp **ஒட்டி அனுப்பவும்.**

**2.** Book Post **என** Rs.4 **தபால்தலை ஒட்டும்போது திருமண அழைப்பிதழ்களில், கையெழுத்துஇட்டோ அல்லது பேனாவில் எதையாவது எழுதினாலோ** Due **அல்லது அபராதம்(**Fine**) இடுவதால் தபால் அனுப்புபவர் எச்சரிக்கையாக அனுப்பவும்.**

**3. எங்களுடைய ஜாமக்காரன் உங்களுக்கு அல்லது அனுப்பப்படும்போது உங்களுக்கு அனுப்பும் எங்கள் கடிதங்கள் ஏதாவது காரணத்தால் தபால்துறையிலிருந்து** due(fine) **வசூலிக்கப்படும்போது அதை** Refused **என்று எழுதி தயவுசெய்து எங்களுக்கே திருப்பி அனுப்பவும். நாங்களும் எங்களை சரி செய்ய அது உதவியாக இருக்கும்.**

**4. பேங்க் வழியாக,** Emo**-மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் தயவுசெய்து இ-மெயில் மூலமாகவோ, தொலைப்பேசி மூலமாகவோ, கடிதம்மூலமாகவோ, பேக்ஸ்மூலமாகவோ நீங்கள் காணிக்கை அனுப்பிய தேதி-தொகை-எந்த பேங்க் என்ற விவரத்தை எங்களுக்கு தெரிவித்தால் நல்லது. பேங்க் பாஸ்புக்கில் எங்கிருந்து அந்த தொகை வந்தது!, யார் அனுப்பியது! போன்ற விவரங்களை பேங்க் பாஸ்புக்மூலம் அறிய முடிகிறதில்லை. ஆகவே நீங்கள் காணிக்கையை பேங்க்மூலமாக என் அக்கவுண்ட்டுக்கு அனுப்பிய உடனே எங்களுக்கு தெரிவித்து விடுங்கள். இவ்விஷயத்தில் ஒத்துழைப்பு தந்தால் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டும்போது அவர்கள் எங்களை குற்றம் சாட்ட முடியாதபடியிருக்க உங்கள் அறிவிப்பு உதவியாக அமையும்.**

# திருநெல்வேலி மாவட்டம் கரிசல்பட்டி (இடையன்குளம்) CMS சபை கூட்டங்கள்







திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ சபை, **இடையன்குளம்** சர்கிள்(பாஸ்ட்ரேட்) **கரிசல்** என்ற கிராமத்தில் உள்ள CMS சபை சேர்ப்பின் பண்டிகை கூட்டம் வெகு சிறப்பாக நடந்தது. சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம சபை மக்களும் பஸ்கா பண்டிகை ஆசரித்த பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்ததுபோல குடும்பம் குடும்பமாக வேனிலும்,கார்களிலும் வந்து இக்கூட்டங்களில் கலந்துக்கொண்டனர். 3நாள் செய்தியை மிக உற்சாகமாக கேட்டு பயனடைந்தனர்.

சு.ஆல்பர்ட் கெர்சோன்,BD.,MA.,MEd., Rev.K.I.பிரட்ரிக் பால், BTh.,BSc.,BEd.,இவர்களுடன் சபை ஊழியர், **பாஸ்டர்.P.சாமுவேல்** அவர்கள் இணைந்து இக்கூட்ட ஏற்பாடுகளை மிகவும் ஜெபத்தோடு செய்திருந்தனர்.

CMS சபையின் ஆயர்கள் **ஆசிரியர்களாக இருக்கவேண்டும்.** வேதாகம கல்வியும் கற்றிருக்கவேண்டும். இந்த தகுதியின் அடிப்படையில்தான் சபை ஊழியர் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது இதன் முக்கிய அம்சமாகும். கர்த்தர்தாமே CMS சபைகளை ஆசீர்வதிப்பாராக. 30 வருடத்துக்கு பிறகு இந்த பகுதி CMS சபைக்கு ஊழியத்துக்கு அழைக்கப்பட்டுள்ளேன்.

# இந்தியாவின் 69வது சுதந்திர தினம்




‘ 69 வருடங்களுக்குமுன் இந்தியா சுதந்திரநாடாக மாறி, இன்று நம்மைநாமே ஆட்சி செய்யும் சுதந்திரத்தை பெற்றோம். நம்முடைய தேச தலைவர்கள் கஷ்டப்பட்டு உயிர்தியாகம் செய்துபெற்ற இந்த சுதந்திரத்தை **தவறாக பயன்படுத்தும்** அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் என அத்தனை பேர்களையும் நம் தேவன் உணர்த்தி தெய்வபயத்துடன்,லஞ்சம் இல்லாமல், ஊழல் இல்லாமல் தேசத்தை ஆளுகை செய்யவும் நாம் தினமும் ஜெபிப்போம்.

**" தேசத்தை அழிக்காதப்படி திறப்பின் வாசலில் நிற்கத்தக்கதாய் ஒரு புருஷனை தேடினேன்" .எசே 22:30.**

**" தேசத்தில் நடக்கிற அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு" என்றார். எசே 9:4.**

**- ஜாமக்காரன்**



AUGUST 2015

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.